
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 132
வியாழக்கிழமை 07 ஏப்ரல் 2022
பங்குனி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16 | விலை : ரூ.40



# மக்களுக்கு மதிப்பளித்து கௌரவமாக விலகுங்கள்

**ராஜபக்சக்களிடம் வலியுறுத்தியது எதிர்க்கட்சி**
**பதவிக்குப் போட்டியிடும் நேரம் இதுவல்ல என்றும் அறிவுரை**

கொழும்பு, ஏப்ரல் 7

நாட்டு மக்கள் தேர்தல் வேண்டும் என்று கோரவில்லை. ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவே போராட்டம் நடத்துகிறார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 15

## "பஸில் காகம்" "கோ கோத்தா"

*நாடாளுமன்றில் நேற்று எதிர்க்கட்சிகள் பிரளயம்*

கொழும்பு, ஏப்.7

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணத் தவறிய ஜனாதிபதியும், அமைச்சரவையும் பதவி விலக வேண் 15

## நேற்றுமுதல் பாடசாலைகள் விடுமுறை

கொழும்பு, ஏப்.7

நாட்டிலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள் அனைத்துக்கும் நேற்று முதல், தவணை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறி 15

## இலங்கை ரூபா: உலகின் பலவீனமான நாணயம்

கொழும்பு, ஏப்.7

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், உலகின் மிகப் பலவீனமான நாணயமாக இலங்கை ரூபா மாறியுள் 15

## தங்கம் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப்.7

நாட்டில் தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள் 15

## மஹிந்தவின் தலைமையில் நேற்று இரவு நீண்ட கூட்டம்!

கொழும்பு, ஏப்.7

நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், ஆளும் கட்சி 15

## காலம் கடந்து பிறந்தது ஞானம்: நிபுணர் குழு நியமித்த கோத்தா

கொழும்பு, ஏப்.7

பலதரப்பு விவகாரம் மற்றும் கடன் நெருக்கடியைத் தீர்த்தல் என்பவற்றுக்காக ஜனாதிபதி ஆலோசனைக் குழு ஒன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் 15



## ஓயவில்லை போராட்டம்!

கொழும்பு, ஏப்.7

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தவறிய ஜனாதிபதி கோத்தா 15

## இலங்கைக்கு வந்தது இந்திய எரிபொருள்!

*ஆனாலும் தொடர்கிறது தட்டுப்பாடு*

கொழும்பு, ஏப்.7

நேற்றுடன் முடிந்த 24 மணி நேரத்தில் இந்தியாவின் கடன் 15

## மருந்துகளுக்குத் தட்டுப்பாடு; சுகாதாரத்துறை முடங்கும்?

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஏப்.7

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு காரணமாக அடுத்த சில வாரங்களில் நாட்டின் சுகாதாரத்துறை பெரும் பிரச்சி 15



## மக்களைச் சாந்தப்படுத்த வித்தைகள் காட்டும் அரசு!

கொழும்பு, ஏப்.7

ராஜபக்ச அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலை 15

## பதவியை ஒருபோதும் கைவிடார் கோத்தாபய!

*ஆளும் தரப்பு திட்டவட்டம்*

கொழும்பு, ஏப்.7

ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபய ராஜபக்ச ஒருபோதும் விலக மாட்டார் என்று ஆளும் தரப்பு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஆளும்கட்சிப் பிரதமகொறா 15



## ஜோன்ஸ்டனின் அலுவலகம் மக்களால் நேற்று முற்றுகை

கொழும்பு, ஏப்.7

குருநாகலில் உள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அலுவலகம் நேற்று இரவு மக்களால் முற்றுகையிடப்பட்டது. அதேநேரம், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆத 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய ராஜபக்ச பதவி விலகவே மாட்டார்



## நாடாளுமன்றில் அரசு திட்டவட்டம்

**கொழும்பு, ஏப். 7**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 69 லட்சம் பேர் ஆணை வழங்கியுள்ளனர். அவர் ஒருபோதும் பதவி விலக மாட்டார். நெருக்கடி நிலைமையை நாம் எதிர்கொள்வோம் - இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ திட்டவட்டமாக அறிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் வன்முறையைத் தூண்டவேண்டாம், வெளிநாட்டவர்கள் வருவது குறைவடைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் பயணங்களை இரத்துச் செய்கின்றனர். எனவே, நாட்டை வீழ்வதற்கு இடமளிக்க வேண்டாம் என எதிரணிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டில் ஏற்படவிருந்த வன்முறையை அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் ஆகியவற்றை பயன்படுத்தி ஜனநாயக வழியில் ஜனாதிபதி கட்டுப்படுத்தினார். அதற்காக அவருக்கு நன்றிகள். அவசரகாலச் சட்டம் தொடர்பில் கூட்டமைப்பு வாக்கெடுப்பைக் கோருகின்றது. இது சில்லறைத்தனமான அரசியலாகும். "கோ ஹோம் கோத்தா" என்கின்றனர். ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அவர் பதவி விலகமாட்டார். நாம் இந்நிலைமையை எதிர்கொள்வோம். அஞ்சமாட்டோம் - என்றார். (ஒ-44)

---

# பொருளாதார வளர்ச்சி 2.4 வீதமாக குறையும்

கொழும்பு, ஏப். 7

2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2.4 வீதமாகக் குறையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பெறப்பட்ட கடன்கள் மற்றும் குறைந்த வெளிநாட்டுக் கையிருப்பு போன்ற காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது. அதேபோல், 2023 ஆம் ஆண்டில் 2.5 வீதமாக பொருளாதார வளர்ச்சி மேம்படும் எனவும் அந்த வங்கி குறிப்பிட்டுள்ளது. (ம)

---

# இரகசிய இராணுவம் நாட்டில் உள்ளதா?

## நாடாளுமன்றில் சஜித் கேள்வி



கொழும்பு, ஏப். 7

நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதற்கு உண்மையான காரணம் என்ன? சமூக ஊடகங்கள் எதற்காக முடக்கப்பட்டன?, நாட்டில் இரகசிய இராணுவப் படையணியொன்று உள்ளதா? இவற்றுக்கு அரசு பதிலளிக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று கேள்விக்கணைகளைத் தொடுத்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் எதற்காக அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது? தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா? பயங்கரவாத அச்சுறுத்தல் இருந்ததா? நாட்டின் இறையாண்மைக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டதா? அதேபோல எதற்காக ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது? சமூக ஊடகங்கள் எதற்காக முடக்கப்பட்டன? இவற்றுக்குத் தெளிவான பதில் அவசியம்.

அத்துடன், நாடாளுமன்றத்தை சூழ மக்கள் அமைதியாக போராடினர். மாஸ்க் அணிந்துகொண்டு, சீருடையில் ஆயுதங்கள் சகிதம், இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள்களில் சிலர் வந்துள்ளனர். பொலிஸாருடன் தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளனர். எதற்காக இவர்கள் வந்தனர், இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள்களை ஏன் பயன்படுத்தவேண்டும், இது தனிக் குழுவா? அல்லது இரகசிய இராணுவமா? இவற்றுக்கும் பதில் அவசியம்.

அதேவேளை, பண்டோரா ஆவணத்தில் பெயர் வெளிவந்தவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள டொலரை இங்கு கொண்டு வந்தால் பிரச்சினையைத் தீர்க்கலாம். அதற்கான சட்டம் இயற்றப்படவேண்டும் - என்றார். (ஒ-44)

---

# பிரதி சபாநாயகர் பதவியில் தொடர்வார்

கொழும்பு,ஏப்.7

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலா பிட்டியவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்க மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் தொடர்ந்து பேணுமாறு ஜனாதிபதி அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், பலர் அமைச்சுப் பொறுப்புக்கள், இராஜாங்க அமைச்சுப் பொறுப்புக்கள் மற்றும் உயர் பதவிகளை விட்டு விலகி வருகின்றனர். அந்தவகையில் பிரதி சபாநாயகரும் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்திருந்தார். (க-இ)

---

# எம்.பிக்களுக்கு உயிரச்சுறுத்தல்

## மனுஷ நாணயக்கார எம்.பி நாடாளுமன்றில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 7

இலக்கத் தகடுகள் இல்லாத மோட்டார் சைக்கிளில் வருவோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சுட்டுக்கொல்லலாம்.

இது பாரதூரமான பிரச்சினையாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்துக்கு முன்பாக நேற்று (நேற்றுமுன்தினம்) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, பதிவு இலக்கம் இல்லாத மோட்டார்சைக்கிள்களில், முகத்தை மறைத்தபடி இராணுவத்தினர் வந்துள்ளனர். யார் இவர்கள்? எதற்காக வந்தார்கள்? என்பது எங்களுக்கு தெரியாது.

இதுபோன்ற மோட்டார்சைக்கிளில் வந்தே லசந்த விக்ரமதுங்கவை சுட்டுக் கொன்றனர். இது பாதுகாப்புப் பிரச்சினையாகும். 88, 89ஆம் ஆண்டுகளில் ஆயுதம் ஏந்தியதுபோன்ற நிலை ஏற்படலாம். எனவே உடனடியாக இது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டும் - என்றார். (ம)

---

# பொலிஸாருக்கு இனி இராணுவச் சாப்பாடு!

## முன்னாள் இராணுவ அதிகாரியின் பேஸ்புக் பதிவொன்றால் சர்ச்சை

பொலிஸாருக்கு இனிமேல் 'இராணுவச் சாப்பாடு' கொடுப்போம் என்று முன்னாள் இராணுவ அதிகாரியொருவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள கருத்தால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது, பதிவு இலக்கம் இல்லாத மோட்டார் சைக்கிளில், முகத்தை மறைத்தபடி இராணுவத்தினர் வந்துள்ளனர். அவர்களை பொலிஸார் வழிமறித்தனர். இதன்போது, ஒரு சிப்பாய் இலேசாக தாக்கப்பட்டதைப் போன்ற காட்சிகள் வெளியாகியிருந்தன. இந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த இராணுவத் தளபதி கோரியிருந்தார். இந்த நிலையில் ஓய்வுபெற்ற இராணுவ உயரதிகாரியொருவர், பொலிஸாருக்கு இன்று முதல் இராணுவச் சாப்பாடு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ம)

---

# போராட்டங்கள் நடந்தாலும் அவசரகாலச் சட்டம் அவசியமில்லை

## என்கிறார் தினேஷ் குணவர்தன

கொழும்பு, ஏப். 7

போராட்டங்கள் இடம்பெற்றாலும் தற்போதைய சூழ்நிலையில், அவசரகாலச் சட்டம் அவசியமில்லை எனத் தேசிய பாதுகாப்பு சபை கருதியதாலேயே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது என்று சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜனாதிபதியின் வீடு சுற்றிவளைக்கப்பட்டு சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக உடனடியாக பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. இதனால் அவசரகால நிலை ஏற்பட்டது. எனவே, மக்களின் பாதுகாப்புக் கருதியே அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஜனாதிபதி தலைமையில் பாதுகாப்பு சபைக் கூட்டம் நேற்று (நேற்று முன்தினம்) கூடியது. போராட்டங்கள் இடம்பெற்றாலும் தற்போதைய சூழ்நிலையில் அவசரகாலச் சட்டம் அவசியம் இல்லை என பாதுகாப்புச் சபை நம்புகின்றது. அதன்பின்னரே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது- என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட யுகம் நாட்டில் உருவாகாமல் இந்த வாரத்துக்குள் தீர்வைக் காணுங்கள்

## சபாநாயகர் நேற்றுக் கோரிக்கை

**கொழும்பு, ஏப். 7**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதேபோல உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கு ஜனநாயக வழியில், அரசமைப்பு ரீதியாக பொதுவானதொரு வேலைத்திட்டத்தை இந்த வாரத்துக்குள் உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள், அதனைச் செயற்படுத்துங்கள்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவசர கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போதே, மக்களின் சார்பில் தான் இந்த கோரிக்கையை விடுப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

'கடும் பொருளாதார நெருக்கடியின் ஆரம்பக் கட்டத்தில் நாடு உள்ளது, இந்நிலைமை மேலும் உக்கிரமடையக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாலேயே 'ஆரம்பக்கட்டம்' என நான் குறிப்பிடுகின்றேன். இன்று நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தட்டுப்பாட்டை விடவும், கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையை அப்படியே விடுவதா அல்லது ஓரளவேனும் கட்டுப்படுத்திக்கொள்வதா என்பது இனிவரும் நாள்களில் நாம் எடுக்கவுள்ள நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது' என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, நாடாளுமன்ற வளாகத்தை போராட்டக்காரர்கள் சுற்றிவளைத்ததால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலை பற்றியும் சபாநாயகர் விவரித்தார்.

> **கடும் பொருளாதார நெருக்கடியின் ஆரம்பக் கட்டத்தில் நாடு உள்ளது, இந்நிலைமை மேலும் உக்கிரமடையக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இன்று நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தட்டுப்பாட்டை விடவும், கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நாடாளுமன்ற ஜனநாயகத்தை நம்புபவர் என்ற அடிப்படையில் இத்தகைய சம்பவங்களை, தான் கண்டிப்பதாகவும், இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்புத் தரப்பினருக்கு தான் அறிவித்துள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை, அழுத்தங்களால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

எவரால் இந்நிலைமை ஏற்பட்டது, தவறு எங்குள்ளது என்பது பற்றி விவாதித்து பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ளாமல், தற்போது என்ன செய்ய வேண்டும், அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பது தொடர்பில் விவாதித்து, ஒற்றுமையாக தீர்வை எட்டுங்கள்.

கூட்டு நடவடிக்கை வெற்றியளிக்கும் என்ற பாடத்தை வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது என அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

'நாடாளுமன்றம் தற்போது எதிர்கொண்டுள்ள இந்நிலைமையை ஜனநாயக வழியில் தீர்க்கலாம் என நாம் நம்புகின்றேன்.

அவ்வாறு முடியாமற்போனால் அதன்மூலம் நாடாளுமன்ற ஜனநாயகம் தோற்கடிக்கப்படும். மீண்டும் இருண்ட யுகம் உருவாகக்கூடும்.

எனவே, தோல்வி அடையாமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

(ஓ-44)

# சட்டமா அதிபருக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றப்பிரேரணை

## ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ தெரிவிப்பு

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சட்டமா அதிபருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றப்பிரேரணை முன்வைக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமைக்கு நிறைவேற்று மற்றும் சட்டவாக்கத்துறை மட்டுமல்ல நீதித்துறையும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். 'சட்டத்தரணிகள் இன்று வீதிகளில் இறங்கியுள்ளனர். காட்டாட்சிமூலம் ஜனநாயகத்துக்கு சவால் விடுக்கமுடியாது.

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. சில வழக்குகளுக்கு சாட்சியங்கள் முன்வைக்கப்படுவதில்லை.

இதனால் குற்றவாளிகள் விடுதலையாகின்றனர். மல்வானை வழக்கிலும் அப்படித்தான் நடந்துள்ளது. இந்நிலைமை தொடரக்கூடாது. அவ்வாறு தொடர்ந்தால் சட்டமா அதிபருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு, அதன் ஊடாக பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, மக்கள் கோரிக்கையை ஏற்று, பதவி விலக அரசு தயார் இல்லை. பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியைப் பொறுப்பேற்க எதிரணியும் தயார் இல்லை. எனவே நாடாளுமன்றம் எதற்கென மக்கள் கேட்கின்றனர். தற்போதைய நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்காக பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது கட்சித் தலைவர்களின் கடப்பாடாகும். எனவே, புதிய பிரதமர் நியமிக்கப்பட்டு, புதிய அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும்' என்றும் விஜயதாஸ ராஜபக்ச கூறினார்.

(ஓ-44)




**போன திங்கட்கிழமை நாடு முழுக்க மைதானங்களைத் திறந்து வைக்கிற நிகழ்வு ஒண்டுக்கு ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருந்தது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலையும் ஒவ்வொரு மைதானத்தை தெரிவுசெய்து, அதைப் புனரமைச்சு, திங்கட்கிழமை காலைமை 9.42 மணிக்கு நாடு முழுக்க ஒரே நேரத்தில் அந்த மைதானங்களைத் திறக்கிறதுதான் திட்டம்.**

**அதின்படி யாழ்ப்பாணத்தில பதினைஞ்சு பிரதேச செயலகங்களிலையும் பதினைஞ்சு மைதானங்களை திறக்க வேணும். வேலிக்கு கதியால் போடுற நிகழ்வெண்டால் கூட, தலைப்பாகை கட்டிக் கொண்டு படத்துக்கு போஸ் குடுக்கிற , கனவு பாழான எம்.பி இப்பிடி பதினைஞ்சு மைதானங்களுக்கும் போய் நடப்புக் காட்டுற நிகழ்வைத் தவறவிடுவாரோ?**

**ஆனால் காலமை 9.42 மணிக்கு எல்லா இடத்திலையும் நிக்கிற அளவுக்கு அவரொண்டும் தசாவதாரம் படத்தில வாற கமலஹாசன் இல்லையே. அதால எப்பிடி இந்த பதினைஞ்சு மைதானங்களையும் திறக்கலாம் எண்டு யோசிச்சார். அப்பதான் அல்லக்கை ஒருத்தர் அவருக்கு 'அதெல்லாம் நேரம் பாக்கத் தேவையில்லை. நீங்கள் எல்லாத்தையும் போய் திறவுங்கோ. 9.42 மணிக்கு திறக்காட்டி , மேலிடம் என்ன அக்சன் எடுக்க ஏலும்? ஒரு பிரச்சினையும் வராது' எண்டு குடுத்த தைரியத்தில அட்டவணை ஒண்டு போட்டார். அதின்படி காலைமை 7 மணிக்கு சாவகச்சேரியில தொடங்கிற மைதானத் திறப்பு விழா பின்னேரம் 3.30 மணிக்கு கோப்பாயில முடியிற மாதிரி எல்லாம் பக்காவா பிளான் பண்ணி, அதை உரிய மைதானங்களுக்கு பொறுப்பானவைக்கும் அறிவிச்சாச்சு. இனி விடிய வேளைக்கே எழும்பி மைதானங்களைத் திறந்து வைச்சு, ஸீன் போடலாம் எண்டு நினைச்சுக் கொண்டு படுத்திருந்து கனவு காணத் தொடங்கிட்டார் அந்தக் கனவுக்கார எம்.பி.**

**ஆனால், எம்.பி நினைச்சதொண்டு, நடந்ததோ வேற ஒண்டு. அவரே எதிர்பார்க்காத மாதிரி நாட்டு நிலைமை கடும் சிக்காலயிட்டு. போதக்குறைக்கு கொழும்பில அரசாங்கத்தோட ஒட்டிக்கொண்டு திரிஞ்ச எல்லா எம்.பிமார் வீட்டையும் உடைக்கிற மாதிரி சனங்கள் ஆவேசமாப் போராடேக்க, இஞ்சயும் அப்பிடி நடக்கலாம் எண்டு ஆளுக்குப் பயம் வந்திட்டு. இருக்காதோ பின்ன? அப்பிடியெல்லோ ஆளின்ர ஆட்டம். அதால சிலவேளை மைதானம் திறக்கப் போய், சட்டை கிழிஞ்சுதான் வர வேண்டியிருக்குமோ எண்ட பயத்தில ஒரு மைதானத்தைக் கூட கனவுக்கார எம்.பி திறக்கப் போகாமல் பம்மிட்டாராம். பிறகு அந்தந்தப் பிரதேச செயலர்மார்தான் அவைக்குரிய மைதானத்தை திறந்து வைச்சவையாம். எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பினை வேணும் கண்டியளோ. பாவம், எம்.பி, அவரின்ர எல்லாக் கனவுகளையும் மாதிரி இந்த மைதானம் திறக்கிற கனவையும் இப்பிடி சல்லி சல்லியா உடைச்சிட்டாங்களே.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியினரும் போராட்டத்துக்கு ஆள்களை அழைத்து வருகின்றனர்

## இரா. சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 7**

**நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரை ஆளும்கட்சியும் அழைத்து வந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஆளும்கட்சிக்குத் தேவை கோத்தாபயவை வீட்டுக்கு அனுப்புவதில்லை, நாடாளுமன்றில் உள்ளவர்களை வீட்டுக்கு அனுப்புவதே யாகும்.

கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஆளும்கட்சிக்கும் இந்த போராட்டங்களை இவ்வாறே கொண்டு செல்ல வேண்டிய தேவை உள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு கோத்தாபய ராஜபக்ச பதவி விலகுவதேயாகும். எனவே பொதுமக்கள் அங்கும் இங்குமாக போராட்டத்தை முன்னெடுக்காமல், ஜனாதிபதி, பிரதமர் வீடுகளுக்கு முன்னால் சென்று போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகியதாகத் தெரிவித்தார்கள். ஆனால், அனைவரும் நாடாளுமன்றுக்கு அரசவாகனங்களிலேயே வருகிறார்கள். அரச வாகனத்தைப் பயன்படுத்தப் போவதில்லை, சிறிய கார் ஒன்றைப் பயன்படுத்துவேன் என்று வாசுதேவ நாணயக்கார முன்னர் கூறினார். ஆனால் இன்று அவரும் அரசு வழங்கிய வாகனத்திலேயே வருகை தந்துள்ளார் -என்றார். (ஒ-இ)

# மர்மமான முறையில் இருவர் படுகொலை

கொழும்பு, ஏப்.7

மர்மமான முறையில் இருவர் கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், விபத்தால் உயிரிழந்தனர் என்று தகவல் பரப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை - மாமடலப் பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

மாடுகள் இரண்டை அழைத்துச் செல்ல வந்த இருவருக்கும், மாட்டின் உரிமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாகன விபத்தில் சிக்கியதாக இருவர் அங்குனகொலபெலஸ்ஸ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

மேலதிக விசாரணைகளில் குறித்த இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தெரியவந்துள்ளது. இவர்கள் சேர்க்கப்பட்டபோது, மாமடல ரத்னவீர பாலத்துக்கு அருகில் விபத்து ஏதும் இடம்பெறவில்லை என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் சூரியவெவப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பல விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (க-இ)

# காவியநாயகன்

## திருப்பாடுகளின் நாடகம் இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், ஏப். 7

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் இன்று முதல் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் ஆற்றுகை மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை ஆற்றுகை மாலை 7.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளாரால் 2001ஆம் ஆண்டில் முதன் முதலாக எழுதப்பட்ட 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம், 'மனிதம்' என்ற தேடலுக்கு பதில்தரும் வகையில் அமைந்துள்ள இயேசுவின் வாழ்வில் அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது.

'காவிய நாயகன்' இதற்கு முன்னதாக 2001, 2004, 2008, 2013ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டபோது நெறியாள்கையை நீ.மரியசேவியர் அடிகள், யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் மேற்கொண்டார்கள். இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் நாடகப் பொறுப்பாளரும் பெண் அரங்கக் கலைஞருமான வைதேகி செல்மர் எமில் மேற்கொண்டுள்ளார். இவர் 2014ஆம் ஆண்டில் 'வேள்வித் திருமகன்' ஆற்றுகையை நெறியாள்கை செய்து மிகுந்த வரவேற்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# குழந்தைக்கு பால்மா வாங்க முடியாது தற்கொலைக்கு முயன்ற குடும்பஸ்தர்

கொழும்பு, ஏப்.7

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக, தனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது எனத் தெரிவித்து, தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி குதிக்க முயன்ற ஒரு பிள்ளையின் தந்தை பொலிஸாரால் காப்பாற்றப்பட்டார்.

பொகவந்தலாவ- கேம்பியன் எல்டொப்ஸ் தோட்டத்தைச் சேர்ந்தவர், 80 மீற்றர் உயரமான கோபுரத்தில் ஏறியுள்ளார் என்று அந்தப் பகுதி மக்கள் பொகவந்தலாவ பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

உடனடியாக செயற்பட்ட பொகவந்தலாவ பொலிஸார், தொலைத்தொடர்புக் கோபுரத்தில் நின்றிருந்தவரின் மனைவியை வரவழைத்து, கணவனை கீழே இறங்குமாறு பல தடவைகள் ஒலிபெருக்கியில் முறையிட்டு, இறக்கினர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஒரு வயதுடைய தனது குழந்தைக்கு பால் மா கூட வாங்க முடியாத நிலையிலேயே தற்கொலைக்கு முயன்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-இ)

# மருதானை டீன் வீதி ஆர்ப்பாட்டத்தால் தடை

கொழும்பு, ஏப். 7

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு நகர மண்டப பகுதியை நோக்கிய மருதானை டீன் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் மோசமான நிதி முகாமைத்துவம் காரணமாக ஏற்பட்டுள்ள கடுமையான மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அரசுக்கு எதிராக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கொழும்பிலுள்ள தேசிய மருத்துவமனைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தால் சுகாதார அமைச்சுக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாகவே இந்த வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ம)

# நிருபமாவும் தப்பியோட்டம்

கொழும்பு,ஏப்.7

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நெருங்கிய உறவினரான நிருபமா ராஜபக்சவும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட எமிரேட்ஸ் விமானத்தில் நேற்று முன்தினம் இரவு 10.25 மணியளவில் அவர் டுபாய் நோக்கிப் புறப்பட்டுள்ளார். உலகளவில் பிரமுகர்களால் முறைகேடாக சேமிக்கப்பட்ட சொத்துக்களை பண்டோரா பேப்பர்ஸ் என்ற ஆவணம் அம்பலப்படுத்தியது. இந்த ஆவணத்தில் நிருபமா ராஜபக்சவின் பெயரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

மன்னார் மனிதப் புதைகுழியை அகழ்வு செய்யும் சட்டமருத்துவ நிபுணர் மற்றும் பேராசிரியர் ஆகியோர் மன்றில் சமுகம் அளிக்காமையால், வழக்கு பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு மன்னார் நகரில் சதொச கட்டடத்துக்கான புனரமைப்பின் போது, மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால் கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டு, மனித எச்சங்களுக்கான அகழ்வுப் பணிகள் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் இடம்பெற்று வந்த நிலையில், மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி அப்துல் சமட் கிபத்துல்லா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனிதப் புதைகுழியை அகழ்வு செய்யும் சட்டமருத்துவ நிபுணர் மற்றும் பேராசிரியர் மன்றில் முன்னிலையாகாத நிலையில், மீண்டும் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி மேல் நீதிமன்றில் வழக்குக்கான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி இருப்பதுடன், வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக...



மிஹிந்தலை பகுதியில் ஆர்ப்பாட்டத்தில்...




# "கோத்தா வெளியேறு" தனிநபர் போராட்டம்

மன்னார்,ஏப்.7

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிவிலகி வீட்டுக்குச் செல்லவேண்டும் என்று வலியுறுத்தி, மன்னாரில் தனிநபர் ஒருவர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மன்னார் பிரதான சுற்றுவட்டப் பகுதியில் "கோஹோம் கோத்தா" எனும் வாசகம் எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறு குறித்த நபர் போராட்டத்தை முன்னெடுத்தார். (சு-213)




# சுகாதார கட்டமைப்பு பாதிப்பு கிளிநொச்சியில் கவனவீர்ப்பு

கிளிநொச்சி,ஏப்.7

"சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைந்து, இலவச சுகாதாரம் இல்லாது ஒழிக்கப்படுகின்றது" என்று தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மருத்துவர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் இணைந்து, மருத்துவமனையிலிருந்து பேரணியாக நுழைவாயில் வரை சென்று வீதியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரை மணித்தியாலம் வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"மருந்துகள் இல்லை, சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. இலவச சுகாதாரம் இல்லாது ஒழிக்கப்படுகின்றது. அனைவரதும் உயிர்கள் ஆபத்தில்" எனும் சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (சு-113)



அவிசாவளையில் நடைபெற்ற அரசாங்கத்துக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் இணைந்துவிட்டு பதங்கல பல்கலை மாணவர்களோடு வழிதிரும்பும் வேளையில் மணியங்கம ரஜமஹா விஹாரையின் எதுல்கம ராஹூல தேரர், தெஹியோவிட்ட உள்ளூராட்சிசபை தலைவர் தமிந்து ஷ்யாமிந்த தலைமையிலான குண்டர் குழுவால் தாக்கப்பட்டார்.





நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டம்...







# மின்சாரசபை ஊழியர்களும் அரசுக்கெதிராகப் போராட்டம்

வவுனியா,ஏப்.7

அரசாங்கத்துக்கு எதிராக மின்சார சபையின் ஊழியர்கள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரதம மின் பொறியிலாளர் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி, பூங்கா வீதியூடாக [illegible] நிலைய வீதியை அடைந்து, மணிக்கூட்டுகோபுரச் சந்தியைச் சென்றடைந்தது. மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தனர். இதனால் ஏ-9 வீதியில் சில மணித்தியாலங்கள் போக்குவரத்து தடைப்பட்டது.

போராட்டத்தில் ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். எரிவாயு இன்மை, மின்சார மின்மை, எரிபொருள் இன்மை போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். (சு-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 7**

**வடக்கு- கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும்போதுதான் எம்மால் நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்கவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்**

வல்வெட்டித்துறையில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதியின் கோரிக்கையின்படி காபந்து அரசாங்கத்தை பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட பல கட்சிகள் நிராகரித்துள்ளன. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை நாங்கள் ஒரு உறுதியான இறுக்கமான தீர்மானத்துக்கு வரவேண்டியவர்களாக இருக்கின்றோம். வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும். இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் போதுதான் எம்மால் நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் -என்றார். (ம-26)

# எமக்கான தீர்வை உறுதிப்படுத்துகின்ற அரசியல் மாற்றத்தையே பரிசீலிப்போம்

## ரெலோ அறிவிப்பு

எமக்கான நிரந்தர தீர்வை உறுதிப்படுத்தும் அரசியல் மாற்றத்தையே நாம் பரிசீலிப்போம் என்று ரெலோ அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எமது நிரந்தர அரசியல் தீர்வுக்கான காலவரையறையை ஏற்றுக்கொண்டாலே அரசியல் ஆட்சி மாற்றங்களில் கரிசனை கொள்ளமுடியும். இல்லையேல் எந்த மாற்றங்களும் எமது மக்களுக்கு அர்த்தமற்றதாகிவிடும்.

நாம் துல்லியமாகக் கணித்தபடி கடுமையான பொருளாதாரச் சிக்கலினாலும் உள்ளக அரசியல் மாற்றங்களினாலும் பெரும் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. தாம் பெரும்பான்மையாக வாக்களித்து தெரிவு செய்த அரசாங்கத்தை அந்த மக்களே எழுச்சி கொண்டு துரத்தி அடிக்கும் சூழ்நிலை பிறந்துள்ளது. இந்த நேரத்தில் தற்காலிக அரசாங்கமா, இடைக்கால அரசாங்கமா, காபந்து அரசாங்கமா என புதிய ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு அரசும் எதிர்க்கட்சிகளும் முனைந்துள்ளன. மாறி வந்திருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பு எப்படி கையாளப் போகிறது என்பதில் தான் எமது இனத்தின் எதிர்காலம், தீர்வு என்பன தங்கியுள்ளன. எம் இனம் முகம் கொடுத்திருக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் நீண்டகாலமாக கோரி வரும் அரசியல் தீர்வுக்கும் முடிவை எட்ட இந்தச் சூழ்நிலையை சரியான முறையில் நாம் கையாளவேண்டும்.

ஓரிருவர் எடுக்கும் முடிவில் அல்லாமல் சரியான முறையில் கையாள்வதே தற்பொழுது தேவையாக உள்ளது. சர்வதேச ஏற்பாடுகளுக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான விசாரணை மற்றும் நீதி, அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வை உடனடியாக நடைமுறைப்படுத்துதல் என்பன மிகக்குறைந்த பட்ச விடயங்களாகக் கருதப்படுகின்றன.

நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையோடு இவற்றை நிறைவேற்றமுடியும். ஆகக்குறைந்தது இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தரப்புடன் பேசுவது பற்றிய பரிசீலனையை நாம் மேற்கொள்ள முடியும்.

இதுவே எம்மினம் சார்ந்து செய்யக்கூடிய சரியான அரசியல் நகர்வாக தற்போதைய சூழ்நிலையில் அமையும் - என்றுள்ளது. (ம)

# சிறுவர்களை பணிக்கமர்த்துவது தொடர்பில் விழிப்புணர்வு

சிறுவர்களை தொழிலில் அமர்த்துவது தொடர்பான சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தும் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகம் பெறுதல் மற்றும் சிறுவர் வியாபாரத்தை கட்டுப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றைக் கண்காணித்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கநெறிகள், சமூகச் சீர்கேடுகள் ஆகியவை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர், உதவி மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், மாநகர சபை ஆணையாளர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# மின் தடைப்படும் தருணத்தில் ரயில் கடவைகளில் அவதானம்

கொழும்பு, ஏப்.7

மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நேரங்களில், ரயில் கடவைகளைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் எச்சரித்துள்ளது.

பெரும்பாலான ரயில் கடவைகளுக்கு மின்சாரத்தால் இயக்கப்படும் 'சமிக்ஞை மணி மற்றும் மின்சாரவிளக்கு' பொருத்தப்பட்டுள்ளது.

மின் தடையின்போது, அந்த ரயில் கடவைகள் மின்கலத்தில் இயங்கும். ஆனால் நீண்ட நேர மின்வெட்டுக் காரணமாக மின்கலனின் திறன் அடிக்கடி குறைந்தவிடும். அதனால் சமிக்ஞை மணி மற்றும் மின்சாரவிளக்கு அமைப்புக்கள் சரியாக இயங்காமல் போகலாம்.

எனவே மின்வெட்டு ஏற்படும்போது, ரயில்வே கடவைகளை கடக்க அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று ரயில்வே திணைக்கள அத்தியட்சகர் (போக்குவரத்து) ஏ.டி.ஜி. செனவிரத்ன எச்சரித்துள்ளார். (க-இ)

# தமிழர் தேசத்தை அங்கீகரித்தால் இலங்கையில் மீட்சிக்கு சாத்தியம்

## 'பொ-பொ' அமைப்புச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7

இறைமையுள்ள வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதனூடாகவே இலங்கை மீட்சி அடைய முடியும் என்று குறிப்பிட்டுள்ளது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களின் மக்கள் நலன் சாராத ஆட்சி முறைமையால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால், இன்று பெரும் அரசியல் கிளர்ச்சியை சிங்களதேசம் எதிர்நோக்கியுள்ளது. சிங்கள தேசத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தேசமும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நாம் பொருளாதார மீட்சிக்காக போராடவில்லை, மாறாக எமது பிறப்புரிமைக்காகவே போராடிக்கொண்டிருக்கின்றோம். நாம் 20 வருடங்களுக்கு மேல் மின்சாரமின்றி, எரிபொருள்கள் இன்றி, அடிப்படையான அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள்கூட இன்றி மிகக்கடுமையான பொருளாதார தடை [illegible] பொருளாதாரத்துடன், சிறப்பான தலைமையைக் கொண்ட நடைமுறை அரசில் தான் வாழ்ந்து வந்தோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடி எமக்கு ஒன்றும் புதியல்ல. ஆயின் தற்போது ஏற்படுள்ள நிலைமைகளைப் பயன்படுத்தி எமது மக்களையும் இளையவர்களையும் சிலர் தவறாக வழிநடத்தி, சிங்கள தேசத்தின் ஆட்சி மாற்ற போராட்டங்களின் பகடைக்காய்களாகப் பயன்படுத்த விளைகின்றார்கள்.

இது தொடர்பாக அனைத்துத் தமிழ் மக்களும் விழிப்புடன் செயற்படுமாறு வேண்டுகின்றோம். அவர்களை சர்வதேச விசாரணையூடாக கூண்டில் ஏற்ற வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கான மூல காரணங்களை ஆராயாது, சிங்கள தேசம் ஆட்சியாளர்களை மாற்றுவதன் மூலம் தீர்க்க விளைகின்றது. அதைவிடுத்து, சிங்கள தேசம் தமிழ் மக்களின் நியாயமான உரிமை போராட்டத்தை ஏற்றுக்கொள்வதுடன், எம்மீதான இனவழிப்புக்கு சர்வதேச நீதி பொறிமுறையினூடாக நீதியைப் பெற வழிசமைப்பதுடன், இறைமையுள்ள வடக்கு- கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதனூடாகவே மீட்சி அடைய முடியும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"செல்வத்தை மட்டுமே நாடுபவன் வீழ்ச்சி அடைவான். நற்பண்பு உடையவன் கிளைபோல் செழித்து இருப்பான்" - மவுண்டர்

## இராணுவ ஆட்சிக்கான முத்தாய்ப்பா?

இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்களின் மனோநிலை தீவிரமடைந்து செல்கின்றது. நாள்தோறும் நடக்கும் போராட்டங்களும், அவற்றின் வீரியமும் இத்தகைய நிலையையே புடம் போட்டுக்காட்டுகின்றன. இந்தத் தொடர் போராட்டங்கள் மக்கள் கிளர்ச்சியை நோக்கி நகர்கின்றன. ஆட்சியாளர்களுக்கும் அது புரியாமலில்லை. ஆனாலும், இவை எவற்றுக்கும் அவர்கள் அசைவதாகவும் தெரியவில்லை.

நாடாளுமன்றத்தில் ராஜபக்ச அரசின் பெரும்பான்மை ஊசலாடுகின்றது. ஆனாலும், ஆட்சியை விட்டுச் செல்வதற்கு அவர்கள் தயாரில்லை. மக்கள் போராட்டங்களால் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால், இராணுவ ஆட்சிக்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஏற்கனவே எதிர்வுகூறல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.


அதற்கான முத்தாய்ப்பாக நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் நேற்றுமுன்தினம் அரங்கேறிய நிகழ்வுகளைக் கருதமுடியும்.

மக்கள் அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். பொலிஸாரின் தடைகளை மதித்து தமது போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். இந்த நிலையில் இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிள்கள் வருகின்றன. அதில் ஆயுதங்களுடன் சீருடையினர் அமர்ந்திருக்கின்றனர். போராட்டக்காரர்களை நோக்கி உறுமிக் கொண்டு அந்த மோட்டார் சைக்கிள்கள் செல்கின்றன. அதன்போதே போராட்டக்காரர்கள், சீருடையினர் மீது தாக்குதல் நடத்தி விரட்டுகின்றனர். பொலிஸாரும், மோட்டார் சைக்கிள்களில் வந்த சீருடையினரை மறித்து விசாரிக்கின்றனர். தாக்குதல் நடத்துகின்றனர். அவர்களது முகமூடிகளை வலுக்கட்டாயமாக அகற்றுகின்றனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர், இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிள்களில் வந்தது இராணுவத்தினர்தான் என்று பகிரங்கமாகத் தெரிவித்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முயன்ற பொலிஸாரை விசாரிக்கக் கோருகின்றார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் வெளிநாட்டு இராஜதந்திரிகளை, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா சந்தித்திருந்தார். நாட்டில் அரசியல் குழப்பநிலையும் தோன்றி, நாடாளுமன்றமும் உறுதிப்பாட்டை இழந்துள்ள நிலையில் இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகள் நாட்டில் இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்யும் போக்குடன் நகர்கின்றனவா என்ற கேள்வியையே எழுப்புகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், கடந்த காலங்களில் தமிழர் தாயகத்தில் இராணுவ ஊரடங்கு நடைமுறையில் இருந்த காலத்தில், இலக்கத்தகடற்ற வாகனங்களில் வந்து ஆள் கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்கள் இன்று வரை வீடு திரும்பவில்லை. இந்தக் கடத்தல்களை இராணுவத்தினரே மேற்கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டு தமிழ் மக்களால் சுமத்தப்பட்டு வந்தது. அதைநிரூபிக்கும் வகையிலேயே, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் அமைந்துள்ளது. இராணுவ ஆட்சி என்பது சிங்கள மக்களுக்கு புதியதாக இருக்கலாம். தமிழ் மக்களுக்கு அது ஏற்கனவே பழகிப்போன ஒன்று.



# அநுரவின் வாகனத்தில் பயணித்தவர்கள் யார்?

### விசாரிக்கும்படி ஜோன்ஸ்டன் கோரிக்கை

**கொழும்பு, ஏப். 7**

**ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க பயணித்த 'டபுள் கப்' வாகனத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தபடி பயணித்தவர்கள் யார் என்பதை உடனடியாகக் கண்டறியுமாறு சபாநாயகர் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக அரசாங்கத்தின் பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க பயணித்த 'டபுள் கப்' வாகனத்தில் தலைக்கவசம் அணிந்தபடி சிலர் பயணித்துள்ளனர். அவர்கள் யார்? எங்கு இறங்கினர்? என்பதைக் கண்டறிய அனைத்துக் கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகளையும் பெறவேண்டும். மிரிஹான சம்பவத்தின் பின்னணியில் ஜே.வி.பி. இருந்துள்ளது - என்றார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த அநுரகுமார, தனது பாதுகாப்பை உறுதி செய்யும் உரிமை தனக்குள்ளதாகவும் ஏதேனும் விசாரணை நடத்தப்பட்டால் தனது பாதுகாவலர்கள் அதற்கு முன்னிலையாவார்கள் - எனத் தெரிவித்தார்.

(ம)

# மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுப்பிலிருந்தவர்கள் மீது தாக்குதல்

### விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு.ஏப்.7

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுப்பிலிருந்தவர்கள், கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை அடுத்து, மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி இல்லத்தைச் சுற்றிவளைத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடளித்தது. மிரிஹான பொலிஸ் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட நபர்கள் தாக்கப்பட்டமை, அமைதி ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் வகையில் தாக்குதல் நடத்திய பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், தாக்குதலுக்கு உத்தரவிட்ட உயரதிகாரிகள், தாக்குதல்களை மேற்பார்வை செய்த அதிகாரிகள், வாகனங்களுக்கு தீ மூட்ட இடமளித்துப் பார்த்துக் கொண்டிருந்த பொலிஸார் மற்றும் இராணுவ மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என்று இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடளித்தது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, நுகேகொட வலயத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(க-இ)

நாளை 08.04.2022 வெள்ளிக்கிழமை பங்குனி 25

சுபநேரம் : 06.37 - 07.37
ராகுகாலம்: 10.37 - 12.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகளை பறிப்பதா ஜனநாயகம்?

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,ஏப்.7

**இலங்கை வரலாற்றில் இருண்ட காலகட்டத்துக்கு தீர்வைக் காணத் தவறிய அரசாங்கம், பாதிக்கப்பட்ட மக்களின் குரலை நசுக்க மேற்கொள்ளும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் அனைத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, நாட்டில் அனைத்து சமூக ஊடகப் பயன்பாட்டையும் முடக்குமாறு சேவை வழங்குநர்களுக்கு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அதற்கு அமைவாக 15 மணி நேரம் வரையில் இலங்கையில் சமூக ஊடகங்கள் இயங்கவில்லை.

இலங்கையின் அரசமைப்பில், பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம் உள்ளிட்டவைகள் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரத்தின் ஒரு பகுதியென்று உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள பல தீர்ப்புகள் மூலம் விரிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உரிமையில் தற்போதைய அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் விமர்சிப்பதும் உள்ளடங்கும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை, உரிமைகள் அனைத்தையும் மனம்போன போக்கில் மீறும் செயற்பாடாகும்.

அரசாங்கத்தின் இந்தத் தன்னிச்சையான நடவடிக்கையானது மக்களின் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சமூகத்தின் தொழிற்சங்க உரிமைகளையும் மீறுவதாகும்.

ஜனநாயக ரீதியாக மக்களின் வாக்கால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடானது ஜனாநாயகத்துக்கு முரணாகும் - என்றுள்ளது. (க-இ)

# கரைச்சி பிரதேசசபை நிர்வாகத்தில் ஊழல்கள்

## விசாரணை அறிக்கை கோரும் ஆளுநர்

கிளிநொச்சி,ஏப்.7

கரைச்சி பிரதேச சபையின் தற்போதைய நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு, 7 நாள்களில் இடைக்கால அறிக்கையையும், 14 நாள்களில் இறுதி அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கரைச்சி பிரதேசசபையின் ஊழல்கள் கடந்த காலத்தில் வெளிக்கொணரப்பட்டன. அதற்கு எதிராக அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்களால் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டப்பட்டது.

சபையின் எதிர்த்தரப்பு உறுப்பினர்களும் தொடர்ச்சியாக குரல் எழுப்பியிருந்தனர். இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிடம் ஊழல்கள் தொடர்பில் ஆவணங்களுடன் முறையிட்டமையை அடுத்து, ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதனையடுத்து பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக கரைச்சி பிரதேசசபையின் ஊழல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-214)

# சட்டவிரோத மணல் அகழ்வு; கிளாலியில் இருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப்.7

தனியார் காணியொன்றில் சட்டவிரோதமாக மணல் ஏற்றினர் என்ற குற்றஞ்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட இரு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் இடம்பெற்றது.

தனது காணியில் சட்டவிரோதமாக வாகனங்களில் மணல் ஏற்றப்படுகின்றது என காணி உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்று சோதனை மேற்கொண்ட பொலிஸார், காணிக்குள் அத்துமீறி நுழைந்து மணல் ஏற்றிய இரு சாரதிகளையும் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து இரு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றினர். (ச-9)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் வழக்கிலிருந்து விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர், ஒரு வருடத்தின் பின்னர், வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் உள்ளே காணப்பட்ட முள்ளிவாய்க்கால் தூபி, பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இடிக்கப்பட்ட வேளை, மாணவர்கள், அரசியல்வாதிகள், இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய இராசரத்தினம் தர்ஷன் மற்றும் பாலசிங்கம் யுகந்தன் ஆகிய இருவரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒரு வருடத்துக்கு மேலாக வழக்கு இடம்பெற்று வந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (க-125)

# மாணவர் அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். மத்திய கல்லூரியில் தரம் 6 வகுப்புக்கு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதோடு விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு மத்திய கல்லூரியின் பாதுகாப்பு நிதியம் மூலம் விசேட புலமைப்பரிசில் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டு மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (ஓ-14)

# தமிழ்நெறி முறைமையில் நடத்தப்பட்ட திருமணம்

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழ்நெறி முறைமையில் திருமணம் மற்றும் பிறந்த நாள் நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

திருமண நிகழ்வு கோண்டாவில் பிரதேசத்தில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. பிரிட்டனில் வசிக்கும் கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த இளைஞன், சுன்னாகத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைத் தமிழ் நெறி முறைமையில் திருமணம் செய்து கொண்டார். பிராமணக் குருக்கள், சமஸ்கிருத மந்திரங்கள் எவையுமின்றித் தமிழ்நெறி முறைமையில் திருமணம் இடம்பெற்றது.

சங்கத்தின் இரண்டாவது நிகழ்வாக தமிழ்நெறியில் பிறந்த நாள் நிகழ்வு, கிளிநொச்சி நகரில் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பங்குனி மாதத்தில் பிறந்த சங்கத்தின் உறுப்பினர்கள் நான்கு பேருக்கு பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

தமிழ்த்தாய் வணக்கம், தமிழ்ச் சான்றோர் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்தல், தமிழ்த் தாய் வாழ்த்து, குறளோசை ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குரியவர்கள் மங்கலச் சுடர் ஏற்றினர். அதன் பின்னர் தேனும், தினைமாவும் சங்க உறுப்பினர்களால் ஊட்டப்பட்டது. (க-214)

# காட்டு யானைகளால் தென்னைகள் சேதம்



கிளிநொச்சி, ஏப். 7

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியிலுள்ள வயல்களில் கடந்த 4 ஆம் திகதி இரவு மூன்று காட்டுயானைகள் புகுந்து தென்னை மரங்களை முற்றாகச் சேதமாக்கியுள்ளன.

தற்பொழுது அறுவடை முடிந்து 2 மாதங்கள் கடந்த நிலையில் பல வருடங்களின் பின்னர் எமது பகுதிக்கு காட்டுயானைகள் வர ஆரம்பித்துள்ளன.

இதனால எமது தற்பாதுகாப்புக்கு யானை வெடியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் சேதமடைந்த தென்னைப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை கமநல சேவையூடாகப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-14,113)

# தற்காப்புக்கலை மகளிருக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப். 7

இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டில் ஆரம்பமான மகளிருக்கான 3 மாத கால இலவச தற்காப்புக்கலை (கராத்தே) பயிற்சி நெறியின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சி நெறியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளோர் மற்றும் விண்ணப்பித்தோர் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வட மாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் அவசியம் கலந்து கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள்!

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை

**கிளிநொச்சி, ஏப். 7**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.**



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் தண்ணீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த மாவட்டங்களில் இனிவரும் நாள்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமையவே பொது மக்கள் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ம-14,214)

## 28லீற்றர் கசிப்புடன் நபரொருவர் கைது!



கிளிநொச்சி, ஏப். 7

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை-துரையாற்றுப்பகுதியில் 28 லீற்றர் கசிப்பு, 368 லீற்றர் கோடாவுடன் சந்தகநபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன. (ம-113)

## சோதனைகளை சாதனைகளாக்குவோம்

**தவக்காலச் சிந்தனை**

சாத்தான் ஆண்டவனை மாணவனாக்கி வேதம் ஓதுகின்றது. சாதனை புரிய வந்தவரை சோதனை செய்கிறது. சிலுவையை மறுக்கச் செய்துவிட்டால் அலகை தன் சிந்தனைகளைச் செயற்படுத்தி மீட்பின் பாதையை மூடிவிட முயற்சிக்கின்றது. உணவு, பதவி, பாதுகாப்பு என்பவற்றை முன்னிறுத்தி அலகை மேற்கொண்ட சோதனைகளை இறைவார்த்தைகளை மேற்கோள்காட்டி வெற்றிகொள்கின்றார் இயேசு. பணத்துக்காக, அதிகாரத்துக்காக, பதவிக்காக, பெருமைக்காக எதையும் செய்யத் துணியும் மனநிலை தற்போது மேலோங்கிச் செல்கிறது.

கடவுளை மறந்து வாழும் மனிதனே கணநேர இன்பத்துக்காக அறநெறியைத் துஷ்பிரயோகம் செய்கின்றான். இறைவனை நம்ப அற்புதங்கள் தேவையில்லை. இரக்கச் செயல்களே போதும். அன்பை அறிவிக்க அதிசயங்கள் தேவையில்லை. ஆண்டவனின் வார்த்தைகளில் நிலைத்திருந்தால் போதும்.

சாகசங்கள் சீக்கிரம் மறைந்துவிடும். விளம்பரங்கள் விரைவில் வெளுத்துவிடும். ஆனால் கடவுளின் வார்த்தைகளில் வேரூன்றி, அவரது திட்டத்தைச் செயற்படுத்துவதில் திளைத்து அன்பு வழியில் நிமிர்ந்து நின்று நீதியுடன் பயணித்தால் எவ்வித சோதனைகளையும் தடைகளையும் சாதனைகளாக பதிவிடலாம். 'நெருப்பிலிடப்படும் இரும்பே கருவியாகும்' என்பதுபோல சோதனைகளால் புடமிடப்படுவதே இறைநம்பிக்கையை ஆழப்படுத்தும்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.**

## ஈழமண்டல சதகம் நூல் வெளியீடு

சாவகச்சேரி, ஏப். 7

பேராசிரியர் சி.சிவலிங்கராசாவால் பதிப்பு செய்யப்பட்ட 'ஈழமண்டல சதகம்' என்ற நூல் நாளை 8ஆம் திகதி மட்டுவில் - கல்வம் சிவன் கோயில் மகாகும்பாபிஷேகத்தினன்று வெளியிடப்படவுள்ளது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வேற்பிள்ளையால் உருவாக்கப்பட்ட 'ஈழமண்டல சதகம்' என்ற தொகுப்பை பேராசிரியர் சி.சிவலிங்கராசா தொகுத்து நூலாக உருவாக்கியுள்ளார். (ம-14,9)

## சிவபூமி இல்லத்தின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஏப். 7

தொல்புரம் - வழக்கம்பரை சிவபூமி இல்லத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவபூமி முதியோர் இல்ல பாலசச்சந்திரன் அரங்கில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் கலந்துகொள்வார். (ம-14)

### ஐ.நா வுக்கு வழங்கப்பட்ட மனு

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் துருவும் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.7

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட மனு தொடர்பில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளரிடம் குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

சிவில் உடையில் சென்றவர்கள் யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் எனத் தம்மை அறிமுகப்படுத்தி அவரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட மனு தொடர்பில் பொலிஸ்மா அதிபரால் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய வாக்குமூலம் பெற்றுக் கொள்கின்றோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி வீட்டுக்கு வந்து பல மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொண்டமை மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறையிட்டுள்ளார். (ஓ-4,10)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதியவர்களுடன் பணியாற்றும் போது கவனமாக இருங்கள். சிலருக்கு எதிர்பாராத உழைப்பின் பலன் இன்று கிடைக்கும். உதவியாளர் ஒத்துழைப்புடன் முக்கியமான பணிகளை முடிப்பீர்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த வரவு வருவதால் நிம்மதி கூடும். கையிருப்புக் கூடும். சொத்துக்கள் மூலம் வருமானம் கிடைக்கும். கடன் தொல்லை தீரும். உற்சாகமான நாள்.

**மிதுனம்:** வேலைப்பளு கூடினாலும் மகிழ்ச்சி குறையாது. இன்று பிறருடைய வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டிவரும். புகழ்பெற்றவரால் நன்மை அடைவீர்கள்.

**கடகம்:** கூடுதல் வேலை செய்வதால் வருமானம் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் உண்டு. உடல் நலம் பாதித்த உறவினர் ஒருவருக்கு நன்மை செய்வீர்கள்.

**சிம்மம்:** உயர் பதவியில் உள்ளோரை வேலை தொடர்பாக சந்திப்பீர்கள். சிலருக்கு பதவி உயர்வும், பொறுப்புகளும் கிடைக்கும். அவசரம் கருதி சில விடயங்களை முடிக்க வேண்டி வரும்.

**கன்னி:** இன்று நீங்கள் எதிர்பார்க்கும் நன்மை தாமதமாகலாம். பணியிடத்தில் உங்களுக்கு புதிய பொறுப்பும், செல்வாக்கும் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதால் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** எவருடனும் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. சிலருக்கு அலைச்சல் அதிகரிக்கும். கடமை தவற வேண்டாம். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பெண்கள் முக்கிய காரணத்துக்காக உங்களின் உதவியை நாடுவர். முன்பு ஏற்பட்ட மனக்குறை அகலும். நிம்மதி கூடும். இன்று பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத சுபச்செலவுகளை சமாளித்து மகிழ்ச்சி அடைவீர்கள். நண்பர்களின் உதவியை நாடி வெற்றி காண்பீர்கள். விரைவாக பணியை முடிப்பீர்கள். மனதில் அமைதி நிலவும்.

**மகரம்:** உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்வீர்கள். நண்பர்கள் மூலம் சில நன்மைகளைப் பெறுவீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படுவதால் பெருமிதம் அடைவீர்கள்.

**கும்பம்:** உங்களின் உழைப்புக்கேற்ற நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த முயற்சி செய்வீர்கள். சிறு பிரச்சினை ஏற்பட்டு விலகும். அமைதியாக இருக்கவும்.

**மீனம்:** பிறரது குடும்ப விடயத்தில் தலையிட வேண்டாம். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். யோகமான நாள். தடைபட்ட செயல் மீண்டும் நண்பர் உதவியால் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்கள் நடத்துவோர் மீது தேவையற்ற வன்முறை வேண்டாம்

## ஐ.நா. வலியுறுத்து

இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களை அமைதியான முறையில் கையாள வேண்டும். அவர்கள்மீது தேவையற்ற வன்முறைகளைப் பிரயோகிக்க வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அதன் ஊடகப் பேச்சாளர் லிஸ் த்ரோசல் தெரிவிக்கையில்,

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் திடீர்த் தட்டுப்பாடு மற்றும் மோசமான பணவீக்கம், பணமதிப்பிழப்பு மற்றும் மின்வெட்டு போன்றவற் றால் இலங்கையின் நிலைமை மோசமாகியுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களால், மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

அவசரகாலநிலை பிரகடனம், ஊரடங்கு உத்தரவு, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமை மற்றும் போராட்டக்காரர்கள் மீதான தேவையற்ற வன்முறைகள் குறித்தும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. எதிர்ப்புப் போராட்டம் அல்லது கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது.

தற்போதைய நிலைமைகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும் - என்றார். (கு-இ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations



எமது அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் இயக்குனர் மன்ற உறுப்பினரும், கழக நிர்வாகச் செயற்பாட்டாளரும் (CLUB ADMINISTRATOR) ஆகிய "வங்கிவீதி" புத்தூர் வடக்கைச் சேர்ந்த **லயன் இராஜதுரை இராகுலன்** அவர்களது பல்வேறுபட்ட சமூகசேவை ஈடுபாடுகள், மற்றும் கலை கலாசார ஈடுபாடுகள் நிமித்தம் கடந்த 2022-03-27 ஞாயிற்றுக்கிழமை அன்று A.S.M. ஷம்சுதீன்ஆலிம் கலை கலாசார ஊடக சமூக மேம்பாட்டுக்கான அமையம் லக்ஸ்டோ மீடியா ஆகியவை இணைந்து "திறமைக்கான தேடல்விருது" விழாவில் கலை கலாசார சமூக சேவை பங்களிப்புக்காக நிந்தவூர் COLLEGE OF ENGLISH மாநாட்டு மண்டபத்தில் லயன் இராஜதுரை இராகுலன் அவர்களை, **"தேசாபிமானி"** விருதும், **"கலைத்தீபம்"** பட்டமும் வழங்கி கௌரவித்தமையை அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம் பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றது.

மேலும் அவர் பல்வேறு சமூக சேவை, கலைப்பணிகளில் ஈடுபட்டு இன்னும் பல விருதுகள், பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ, எமது கழகம் இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றது.

வாழ்த்திநிற்போர்:-

அச்சுவேலி
வட்ட லயன்ஸ் கழகத்தினர்

(CR 8234) (4/6)

# விற்பனை பிரதிநிதி தேவை

இலங்கையின் முன்னணி **தொலைத்தொடர்பு நிறுவனம்** ஒன்றுக்கு ஆண் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

**வயது : 18 - 30**

**கல்வித் தகைமைகள்:** க.பொ.த. (சா/த) சித்தி

**நேர்முக தேர்வு : 08.04.2022** வெள்ளிக்கிழமை

(cs 43986) (2 x 6) **074 006 0074**


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

**செல்வி சுபாசினி செல்வமாணிக்கம்**

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி **செல்வமாணிக்கம் எலிசபெத்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 08.12.1943 மறைவு 06.04.2022

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

# மரண அறிவித்தல்



மண் மகிழ 05.03.1946 விண் நெகிழ 05.04.2022

## செல்வரத்தினம் முத்துப்பிள்ளை

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் முத்துப்பிள்ளை அவர்கள் கடந்த (05.04.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னப்பு ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான அன்னப்பிள்ளை செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரஜனி (சுமதி), பிரபலாதன் (சிவா-Swiss), திருமகள் (நிதி-Canada), அமரர் சசீந்திரன், கஜீகரன் (தீபன்), வசீகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபேந்திரராஜா, சிவமலர் (Swiss), நாதன் (Canada), ராஜினி, மகிழினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கவி, பிருந்தாபன், சாயித்தன், பிருந்தாமன், பிரவிந்த், சிபிதன், அனோஜன், ஜனனி, நிஷாந்தன், ஆத்விகா, அக்ஷியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2022) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19125)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்மிகு பதினைந்தாம் ஆண்டில் 'சிவபூமி முதியோர் இல்லம்'

ஜீவா ஷஜீவன்



வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்' என்கின்றார் வள்ளுவர். அதற்குப் பொருள் சொல்ல விளைந்த பரிமேலழகர், 'பிறப்புத் துன்பம் ஆதல் அறிந்தவன் ஒன்றின் பிறவாமையை வேண்டுவான்' என்கின்றார். பிறவியே துன்பம் என்கில், இயலாமையின் உடல் அவயவங்களின் ஒத்துழையாமையும் சேருகின்ற மூப்பு என்பது துன்பத்திலும் துன்பம் ஆகின்றது. அந்த மூப்பில், அன்பையும் அரவணைப்பையும் நல்க அருகில் எவரும் இல்லை என்கின்ற பெருந்துயரம் வெறும் சொற்களால் மட்டும் சொல்லிவிட முடியாதது. அத்தகு துன்பப்பட்டு, துயருற்ற மூத்தவர்களை அரவணைத்து அன்பையும் பாதுகாப்பையும் ஒரு இடம் வழங்கும் என்றால், ஒருவர் அதற்கு உயர்ந்த மனத்தோடு தன்னலம் கருதாமல் இயக்கம் கொடுப்பார் என்றால், அது முழுமையும் வழங்கிய காலமும் பிறவியை வழங்கிய கடவுளும் போற்றும் செயலாகவே அமையும் என்பதை ஆன்றோர் அறிவார்.

அத்தகு அருஞ்செயலை அறச்செயலாக இந்த மண்ணில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இடைவிடாத பெரும் பணியாகத் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம் ஆற்றி வருகின்றது. அதனை உருவாக்கி அதனைத் தொடர்ந்து இயங்க பொருள்தரும் மூலங்களைத் தூரநோக்கோடு ஏற்படுத்தி மூப்பினால் இடர்படும் முதியவர்களின் துயர் துடைக்கும், கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் பெரும் பணியும் காலம் தோறும் போற்றுதற்குரியது.

### யாழ்ப்பாணத்தின் முதலாவது சைவ முதியோர் இல்லம்!

யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாவது 'சைவ முதியோர்' இல்லமாக இன்று தொல்புரத்தில் தனது பதினைந்தாவது ஆண்டில் பயணிக்கும் சிவபூமி முதியோர் இல்லம் அமரர் மில்க்வைற் கனகராஜா, பேராசிரியர் நந்தி என்பவர்களின் சொல்லூக்கத்தால் பல்வேறு கொடையாளர்களின் பங்களிப்பால் கலாநிதி ஆறு. திருமுருகனால் 2007ஆம் ஆண்டு செயலாக்கம் கொடுக்கப்பட்டது.

இதுவரையில் சிவபூமி முதியோர் இல்லத்தில் 96 முதியவர்கள் இறையடி சேர்ந்துள்ளனர். இவர்களில் ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட முதியவர்களின் ஈமக்கிரிகைகள் தொடக்கம் கொள்ளிக்கடன்வரை கலாநிதி ஆறு. திருமுருகனே நிறைவேற்றியுள்ளார். முதியவர் ஒருவர் மரணமடைந்தால் தமிழ் ஆகம முறைப்படி தேவார திருவாசகப் பாடல்களை இசைத்து முதியோர் இல்லத்தில் மலர்ந்த பூக்களினாலேயே சக முதியவர்கள் மாலை தொடுத்து அணிவிக்க அன்றைய தினமே முதியோர் இல்ல விறகுகளை மயானம் கொண்டு சென்று பூதவுடல் தகனம் செய்யப்படுகின்றது. சிவபூமி முதியோர் இல்லம் மனிதத்தை அடிப்படையாகக் கொண்டது. மதங்களைக் கடந்தது. வேற்று மதத்தவரும் இங்கே இருந்துள்ளனர். இப்போதும் இருக்கின்றனர். சிவாச்சாரியார் மரபிலே வந்த முதியவர்களும் இங்கே தம் முதுமையைப் போக்கி வாழ்கின்றனர்.

சிறந்த முறையில் முதியவர்களுக்கு மருத்துவ சேவை வழங்க யாழ். போதனா மருத்துவமனையும் மருத்துவர்களும் முன்னிற்பதோடு அவசரசேவை வண்டி ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் எப்போதும் தயார் நிலையில் முதியோர் இல்லத்தில் உள்ளது. முதியோர்கள் ஆலய வழிபாடு செய்வதற்காகவும், சுற்றுலா செல்லவும் அவுஸ்திரேலியா மனித அமைப்பினூடாகப் பேருந்து வண்டி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சங்கானை மற்றும் மூளாய் மருத்துவமனைகளும் சிவபூமி முதியோர் இல்ல முதியவர்களுக்கு மருத்துவ சேவை ஆற்றுகின்றன. குறிப்பாக மருத்துவர் கமலகுமார் இலவச மருத்துவ ஆலோசனையை வழங்குகின்றார். கடுமையான நோய்வாய்ப்பட்டவர்கள், புற்றுநோயாளர்கள் கூட முதியோர் இல்லத்தின் ஆறுதல் கரங்களில் அடைக்கலமாகியுள்ளனர்.

'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை' என்கின்றார் வள்ளுவர். தம் பிள்ளைகளை நீங்கி வறுமையுற்று தன்னிடத்தில் வந்து இறந்து போனவர்களுக்கும் இல்வாழ்வான் துணை செய்வதே அறம் என்கின்றார் அவர். அந்த உயர்ந்த அறத்தை இந்த மண்ணில் ஒரு கட்டுக்கோப்பான நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பாக நிறுவியுள்ளார் கலாநிதி ஆறு. திருமுருகன். அவர், சிவபூமி முதியோர் இல்லத்தால் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பயன்பல பெற்றவர்களால் மட்டுமன்றி இந்தத் தமிழ் கூறும் நல்லுலகாலும் போற்றப்பட வேண்டியவராகின்றார். அவர்தம் பணிகளில் இன்று பதினைந்தாவது ஆண்டை தொட்டுவிட்ட முதியோர் இல்லம் அங்குள்ள முதியவர்களுக்கு சொந்த வீடுபோல் ஆகி நிற்கின்றது.

சுத்தமும் சுகாதாரமும் பேணி முதியவர்களின் மனத்துக்கு இயைபான சூழலோடு நித்தமும் அவர்களுக்கான சிறந்த பணி செய்ய முன்னிற்கின்ற சிவபூமி முதியோர் இல்லம் இந்த யாழ்ப்பாணத்தில் இனியும் வரப்போகின்ற ஆதவற்ற முதியவர்களைக் காக்கும் வண்ணம் தொடர்ந்து இயங்க துணைநிற்பது தமிழர்கள் எல்லோரதும் பெரும் கடமையாகும்.

## facebook

**Vaamalosanan Loshan Ragupathy Balasridharan**


அவசரகாலச் சட்டம் மீளப்பெறல்..
மக்கள் எழுச்சி பயம், மக்கள் பலம் ?? அதெல்லாம் இல்லை..
இப்ப இருக்கிற நிலையில் நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் என்ன நடக்கும் என்பதை நன்கு உணர்ந்து....







நீதி அற்ற நாட்டில்..
நீதியமைச்சர்.....
நிதி அற்ற நாட்டில்.
நிதியமைச்சர்....
அதனால
நமக்கெதுக்கு
வீண் பீதி....










**Senthooran A R Thiruchchenthooran**

ட்ரிங் ட்ரிங்
'ஐயோ இந்த மனுசன் வேற..."
"அப்பாவா? Answer பண்ணு"
"ம்.... சொல்லுங்க அப்பா"
"இப்ப எதுக்கு உன்ர மனிசி, மாமா, மாமி எல்லாம் அவசரப்பட்டு வெளிநாடு போனவ?"
"அப்பா அது...."
"என்னட்ட ஒரு வார்த்தை சொன்னியா நீ? நான் இல்லாட்டி நீங்க எல்லாரும் சும்மா சிங்கி அடிச்சுக் கொண்டு நிப்பீங்கள்..
இந்த குடும்பத்தையே தூக்கி நிறுத்தி ராஜகுடும்பம் ஆக்கினவன் நான்.
உன்ர மனிசி வெளிநாடு போய் எல்லாத்தை யும் சொதப்பீற்றாள். எனக்கேன் எதுவும் சொல்லேல்ல நீ?"
"ஐயோ அப்பா... எனக்கே எதுவும் தெரியாது. நான் அனுப்பேல்ல அவவா ஓடீற்றா... Airport ல நிண்டு நீங்களும் உங்கட கீழ்த்தரமான அரசியலும் [illegible]டுகெட்ட குடும்பமும் எண்டு call எடுத்து திட்டுறாள்"
"மனிசிய கட்டுக்குள்ள வச்சிருக்க தெரியாத உனக்கு எதுக்கு பதவி? நீ உடன resign பண்ணு"
"அப்பா.... அது..."
"ம்... கட் பண்ணீற்றார்.. ம்.. என்னை resign பண்ண சொல்றீங்களா இருடி..."
"அ.... ஹலோ அப்பா பதவியை ராஜினாமா செய்யிறார் உடன breaking ல போடுங்கோ"
'KKK கோபுரம் கொள்ளை கோடிகள்' என்று RRR க்கு நிகராக விரைவில் பிரம்மாண்டமாக தயாராகும் காவியத்திலிருந்து மேற்படி காட்சி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**லிங்கநாதன் மாலினி தம்பதியினரின்**
**செல்வப் புதல்வி**

# லி.வைஷாலி

யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்று 2021 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார் இவர் கல்வியில் மேன்மேலும் சாதனை படைக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

பத்மலிங்கம் குடும்பம், பத்மகரன் குடும்பம், ஜெயந்தன் குடும்பம்
மச்சான்மார்:- சரன், யதுசன், சதுர்த்திகன்
அண்ணா:- ஆதித்தியன்
அக்கா:- தருணிகா
தங்கை:- சாங்கவி

(CS 19214) (4/6)

## கேள்வி அறிவித்தல்

**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**
**அலுவலகப் பாவனைக்கான கட்டடத்தினை வாடகைக்கு வழங்கும் சேவையை பெற்றுக் கொள்ளல்**

1. தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC-Major) அலுவலகப் பாவனைக்கான கட்டடத்தினை வாடகைக்கு வழங்கும் சேவையை பெறுவதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு சார்பில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற் கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது. பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   a) குறித்த கட்டடமானது நல்லூர் அல்லது யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குள் அமைந்திருத்தல் வேண்டும். மற்றும்
   b) குறித்த கட்டடம் பேருந்து (Bus) போக்குவரத்து தடத்திலிருந்து 300m இற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம், 393/48, கோவில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவில் பரிசீலிக்க முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம், 393/48, கோவில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் வேலை நாட்களில் 07.04.2022 ஆம் திகதி தொடக்கம் 20.04.2022 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்வி ஆவணங்கள் 21.04.2022 ஆம் திகதி 10.30 மணிக்கு முன்பதாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம், 393/48, கோவில் வீதி, நல்லூர் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. ஒரு கேள்விதாரரிடமிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சி.திருவாகரன்
தலைவர், பெறுகைக் குழு
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம்
393/48, கோவில் வீதி, நல்லூர்
தொலைபேசி இல. 021- 2219981

07.04.2022

(CR 37801) (3/6)

## யா/நல்லூர் புனித பெனடிக்ற் றோ.க வித்தியாலயம்
## புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு - 2021 (2022)



கி.சகானன் 188 புள்ளி | பி.தனிகன் 188 புள்ளி | பா.கரிஷ் 176 புள்ளி | யூ.இவோலின் சிற்றா 173 புள்ளி | ஞா.யாதுர்ஷன் 172 புள்ளி | க.பிரவின்ராஜ் 170 புள்ளி | பா.லதுஜா 169 புள்ளி | பே.சிம்மகி 167 புள்ளி | நி.அர்விந் 165 புள்ளி | நி.சரிகா 164 புள்ளி | பா.வைசாலி 163 புள்ளி | றொ.றொமேசிகா 161 புள்ளி



ஜோ.செரிப் 161 புள்ளி | கி.வினோஜன் 160 புள்ளி | யோ.மிதுசன் 156 புள்ளி | பி.வேரோணிக்கா 156 புள்ளி | சு.கஜிஷா 156 புள்ளி | கு.சயிந்தவி 155 புள்ளி | பி.கஜன்சிகா 154 புள்ளி | கா.சன்சிகன் 152 புள்ளி | உ.பிரதீஷா 151 புள்ளி | வி.லக்ஷ்மினா 151 புள்ளி | ப.ஆயூசன் 150 புள்ளி | அ.பிரவீன் 149 புள்ளி



ச.சஸ்மியா 149 புள்ளி

தே.தேவானந் 145, த.அஸ்விகா 145, ல.ஹதீரமதுரங்க 143, வி.அக்ஷயன் 140, கி.தனுசன் 139, சு.சுருதிஹா 139, பி.கவின்சா 139, ச.பர்சனா 139, ந.ஆரணி 139, ர.வர்சகா 138, பி.டனுசன் 136, ச.விசாலி 136, அ.டிருத்திகா 136, பி.ரிஸ்வின் 135, ச.சாகித்தியன் 135, கு.ரித்திகா 135, ஜெ.தாரிஷா 134, கு.கன்சிகா 132, த.ரிஷான் 131, ஜெ.லக்ஷாயினி 130, ச.கிருத்திகா 129, சு.சுலக்சன்127, வ.கபிசிகா 126, ஜோ.சகானா 124, உ.கிஷானி 124, ஜெ.கெரேனா 124, ம.யர்சிகன் 123, ற.நிசானா 123, க.ஆருசன் 122, ச.ஆகாஷ் 121, இ.கரிஸ்ணவன் 121, மே.தஸ்மினி 120, ஞா.சது 120, ஜெ.லக்ஷயா 118, சி.கன்ஷிகா 115, அ.துஷாரா 114, வி.சாரங்கன் 113, சி.நந்துஜன் 111, ம.சந்தோஸ்குமரன் 110, ற.கவிதயன் 110, பா.இசைப்பரியன் 109, செ.கிருஷாயினி 109, சி.ஜிந்துயன் 107, ற.யூட் றொபின்சன் 105, கி.கிங்ஸ்லி 104, சு.தரங்கினி 104, வ.ஜோன்ஸ்ரெபான் 102, அ.ஸ்ரெபான் 98, கௌ.கரிஷ் 97, வ.பிருத்திகா 96, கி.லக்ஷனியா 95, யோ.தமிழரசன் 91, த.டிலுசன் 82, றெ.ஜிரோஸ்வெல் 80, க.அனறியன்இளவழகன் 80, க.டிறொக்ஷன் 78, ச.தாரங்கியா 76



இன்றைய நாளில் கௌரவிப்புப் பெறும் எமது மாணவச் செல்வங்களை என்றும் வளமுடன் வாழ வாழ்த்தி நிற்கும்
அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST
450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கொக்குத்தொடுவாய் பகுதிக்கு கண்ணிவெடி அகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்.

ஹலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 25 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலையை முன்னெடுப்பதற்கு மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடிய கற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும், எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப் பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

சிங்கள மொழி பேசும் ஆர்வமுடையவமுடைய விண்ணப்பதாரிகளும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. பெண்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 17ம் திகதி ஏப்ரல் மாதம் 2022 முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**த ஹலோ ட்ரஸ்ற்**
**கொக்குத்தொடுவாய் மத்தி,**
**கொக்குத்தொடுவாய்** (CR 37802) (3/6)

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ற்**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

### முல்லை தேவிபுரம் பகுதியில் இருவர் மீது தாக்குதல்

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் மஞ்சள் பாலத்தடியில் அரச உத்தியோகத்தர் உள்ளிட்ட இரு சகோதரர்கள்மீது இளைஞர் குழு ஒன்று அண்மையில் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி தேவிபுரம் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்வுக்குச் சகோதரர்களான இருவரும் சென்றனர். நிகழ்வில் இரவுவேளை ஒரு கும்பல் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை செய்து விட்டுத்திரும்பிய நிலையிலேயே குறித்த பகுதியில் மறைந்திருந்த கும்பல் இரு சகோதரர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டது. இதன்போது படுகாயமடைந்த இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் புதுக்குடி யிருப்பு பொலிஸாரால் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14-19)

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கம்(வ-து) சாவகச்சேரிகிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 10.04.2022ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளைப் பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமூகமளிக்க தகைமையுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் உரிய கிளைகளுக்கான தவிசாளர்களினால் தனித்தனி அழைப்புக்கடிதம் தபால் மூலம் (வாக்காளர் பட்டியலில் உள்ள முகவரியின் படி) அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும் உரிய அழைப்பு கிடைக்கப்பெறாது விடினும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கிளைப்பொதுச்சபை கூட்டத்திற்கு கலந்து கொள்ள தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் கிளைப் பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம் 10.04.2022 – ஞாயிற்றுக்கிழமை**

| கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | அறநெறிப்பாடசாலை மண்டபம் டச்சு வீதி, சாவகச்சேரி | திருமதி.அருட்செல்வன் றஞ்சினி |
| 02 | சாவகச்சேரி தெற்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/306 நுணாவில் கிழக்கு பழைய பொலிஸ் நிலைய வீதி | திரு.கணேசராசா பரநிருபன் |
| 03 | நுணாவில் கிழக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/307 நுணாவில் கிழக்கு பொது நோக்கு மண்டபம் | திரு. தங்கராசா கண்ணதாசன் |
| 04 | நுணாவில் ஜோதி | கிராமசேவையாளர் அலுவலகம், J/308 நுணாவில் மேற்கு பொது நோக்கு மண்டபம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 05 | கைதடி நுணாவில் | கிளை நிலைய முன்றலில், கைதடி நுணாவில் | திரு.விநாசித்தம்பி சிவபாலன் |
| 06 | மீசாலை கிழக்கு | மீசாலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் மீசாலை கிழக்கு | திரு.கனகரத்தினம் திசாகரன் |
| 07 | வேரக்கேணி | கலைவாணி சனசமூக நிலையம் மட்டுவில் தெற்கு | திரு.நாகலிங்கம் குமணதாசன் |
| 08 | மலர்மகள் | கலைமகள் சனசமூக நிலையம மட்டுவில் தெற்கு | திரு.குணரட்ணம் நிசாந்தன் |
| 09 | சோமஸ்கந்தா | கிளை நிலைய முன்றலில் சோமஸ்கந்தா மட்டுவில் தெற்கு | திரு.சண்முகநாதன் ரதிகுலன் |
| 10 | மட்டுவில் வடக்கு | கண்ணகை சனசமூக நிலையம் மட்டுவில் வடக்கு | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் |
| 11 | சரசாலை மட்டுவில் | கிளை நிலைய முன்றலில், சரசாலை மட்டுவில் | திரு.கந்தையா பாலகிருஸ்ணன் |
| 12 | சரசாலை தெற்கு | கிளை நிலைய முன்றலில், சரசாலை தெற்கு | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் |
| 13 | சரசாலை வடக்கு | கிளை நிலையம், சரசாலை வடக்கு | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் |
| 14 | மோகனதாஸ் | கிளை நிலைய முன்றலில், மோகனதாஸ் | திரு. சண்முகநாதன் பாலகுமார் |
| 15 | கல்வயல் | கிளை நிலைய முன்றலில், கல்வயல் | திரு.சின்னத்துரை குணாளன் |
| 16 | சாவகச்சேரி வடக்கு | இலுவம் சித்திவிநாயகர் சனசமூக நிலையம் மருதடி வீதி சாவகச்சேரி வடக்கு | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் |
| 17 | வேம்பிராய் | சுடரொளி சனசமூக நிலையம மீசாலை வடக்கு | திரு.ஐயாத்துரை மயூரன் |
| 18 | மீசாலை வடக்கு | கிளை நிலைய முன்றலில், மீசாலை வடக்கு மீசாலை | திரு.கனகரத்தினம் வக்ஷன் |
| 19 | மீசாலை மேற்கு | கிளை நிலைய முன்றலில், மீசாலை மேற்கு | திரு. அருளானந்தம் தயாளன் |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | சித்திர வேலாயுதர் சனசமூக நிலையம், மீசாலை கிழக்கு | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 21 | சங்கத்தானை | கிளை நிலைய முன்றலில் , சங்கத்தானை | திரு. கந்தையா கமலநாதன் |
| 22 | சப்பச்சிமாவடி | கிளை நிலைய முன்றலில், சப்பச்சிமாவடி | திரு.சிவசிதம்பரம் சிறீதரன் |
| 23 | கோயில் குடியிருப்பு | கிளை நிலைய முன்றலில் கோயில் குடியிருப்பு | திரு.வேதநாயகம் பிரதீஸ்குமரன் |

**செயலாளர்**
**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ-து)**
**06.04.2022**

(cr 37786) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மல்லாகத்திலுள்ள ISCHI TECH (Computer shop) நிறுவனத்தில் வேலை (Managing) செய்யக்கூடிய ஆண், பெண் வேலையாள் ஒருவர் தேவை சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**வயது எல்லை (23- 40)**

**முன்னுரிமை**

1- O/L படித்திருத்தல் (ஆகக் குறைந்தது).
2- கணினி அறிவு, CCTV கமரா பொருத்துதல்.

Whatsapp:- 0041 788 661 064

**தொடர்பில் :** 076 737 9898, 077 697 0865

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் **திரு.நடராஜபிள்ளை தசரதன்** அவர்களின் பாசமிகு சகோதரன் **நடராஜபிள்ளை வசீகரன்** அவர்கள் 05.04.2022ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 19216) (4/6)

**புவியியற்றுறை சமூகம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் பூமணி



திருநெல்வேலி அம்மன் வீதியை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாக வும் கொண்ட இராசரத்தினம் பூமணி கடந்த 05.04.2022 இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சத்தியதேவி, காலஞ்சென்ற தனேஸ்வரன், லீலாவதி, காலஞ் சென்ற யோகேஸ்வரன், உமாவதி, பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மற்றும் காலஞ்சென்றவர்களான பரிமளம், இராசையா, தம்பிஜயா, அழகம்மா, நவரட்ணம், செல்வராசா மற்றும் மனோன்மணி, பாக்கியம் அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற பத்மநாதனின் மைதுனியும் பவானி, பிரபாகரன், காலஞ்சென்ற பிருந்தா, ரதீபன் ஆகியோரின் பாசமிகு பெரியம் மாவும், சிவராசா, கைடி, மகேந்திரன் காலஞ்சென்ற சாளினி, சந்திரகுமார், கலைச்செல்வன் ஆகியோரின் மாமியும், மிதிலா- தகீர், மீரா–வேந்தன் , சரண்யா, ஜீலியா, பிரசன்னா - சங்கீர்த்தனா, சரண்ஜன், சோபிதா, நிவேதா - செந்தூரன் , நர்மதா , ஆதவன் ஆகியோரின் பேர்த்தியும், பிருந்தா, அருண், அர்ஜுன், ஜெஸ்மின், கெய்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 05.04.2022 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்றது. இந்த தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**மகேந்திரன் :- 077 669 9550**
**உமாவதி :- 0033 6511 63886**
**கலைச்செல்வன் :- 0033 6633 72951**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்** 05.03.1955

**மறைவு** 08.03.2022

கடந்த (08.03.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிய எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சிவக்கொழுந்து குமரகுருநாதன்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு இன்று (07.04.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆசிரியர் கலாசாலை வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**மனைவி - ராஜினி மற்றும் குடும்பத்தினர்.**

(cs:43992) (2.6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 04.03.1934



மறைவு 08.03.2022

யாழ். அரியாலையை பிறப்பிடமாகவும், Toronto Canada வை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் நவரத்தினம் தியாகராசா

(இளைப்பாறிய உத்தியோகத்தர் யாழ் கல்வித்திணைக்களம் நல்லூர்)

கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள்

அன்போடு பழகி நேசத்தோடு அனைவரையும் அரவணைத்து
அயலவரையும் உறவுகளையும் நட்புகளையும் உள்ளத்தால் இணைத்து
மனதால் மகிழ்வு கண்டவர், நெஞ்சார நேசித்து மனமார வாழ்ந்த
நீங்கள் பூமியை விட்டு விடை பெற்றாலும் எங்களின்
மனதை விட்டு அகலவே மாட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அரியாலை நீர்நொச்சித்தாழ்வு
ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலை பேசி யூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்

(cs.43983) (2.6)

# வடபிராந்திய பாரவூர்த்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பகிரங்க ஏல விற்பனை தொடர்பானது

இடம் : திருமுறிகண்டி எரிபொருள் நிலையம் (பெற்றோல் செட்)
காலம் : 15.04.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : மதியம் 1.00 மணி

எமது சங்கத்திற்கு சொந்தமான லொறி, கன்ரேயினர் பெட்டி 02, பவுசர், ஜெக் உட்பட பழைய இரும்பு பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யவுள்ளோம். எனவே இப்பொருட்களை ஏலத்தில் எடுக்க விரும்புகின்றவர்கள் பொருட்களை பார்வையிட்டுக் கொள்வதுடன் மீள் செலுத்தும் வைப்பாக 500.00 வும் மீள செலுத்தாத வைப்பாக 1000.00 ரூபாவினையும் செலுத்தி ஏல விற்பனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
வடபிராந்திய பாரவூர்த்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(CR 37797) (3/6)

# நெஞ்சை விட்டு அகலாத 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வசந்தமலர் கந்தசாமி



அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
பத்தாண்டும் ஆயிற்றோ
நீவிர் எம்மைவிட்டுப்பிரிந்து?
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே
என்றும் உம்மை நினைத்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி! ஓம் சாந்தி!

V.H. லேன்
இருபாலை.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்
077 227 8885

(CS 19220) (4/6)

தோற்றம் 19.07.1955
மறைவு 29.03.2012

# மரண அறிவித்தல்



## திரு.விசுவலிங்கம் அருளானந்தம்

(ஆசிரியர் - ஸாஹிரா கல்லூரி- கல்முனை, வெஸ்லி உயர்தர பாடசாலை- கல்முனை, ஞானசாரியார் கல்லூரி - கரவெட்டி, அதிபர் ஞானசாரியார் கல்லூரி- கரவெட்டி , அதிபர் மத்திய மகா வித்தியாலயம்- நெல்லியடி கரவெட்டி, கொத்தணி அதிபர்- நெல்லியடி கொத்தணி, உதவிக்கல்விப் பணிபாளர்- கரவெட்டி கோட்டம், பருத்தித்துறை கோட்டம், பிரதிக் கல்விப்பணிப்பாளர் வடமராட்சி கல்வி வலயம் நிறைவேற்று அதிகாரி, கல்வி வெளியீட்டு திணைக்களம் கல்வி அமைச்சகம்-இசுறுபாயா)

யாழ். கரவெட்டி துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் அருளானந்தம் அவர்கள் 05-04-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் ஏக புத்திரரும், காலஞ்சென்ற நல்லையா - சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும், சுபாகரன், சுஜீத்தா, சுமேதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி, சிவகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டேவினா, லவின் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், ராமன் அவர்களின் அன்பு அம்மப்பாவும், காலஞ்சென்ற கமலாம்பிகை, சிறீஸ்கந்தராஜா மற்றும் கணநாதன், ரகுநாதன், சிவநாதன், ஜெகநாதன், பாவனிதேவி, பகீரதன், பிரபாகரன், சசிகரன், சிவபாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவயோகன், சிவகுமார், சிவபாதம், சிவமலர், சோதிமலர், திருவருள், அருள்மலர், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் திருக்குமார், உதயன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், கருணாசிங்கம், கருணாவதி, கமலாவதி, கனகரட்ணம், காலஞ்சென்ற கமலேஸ்வரன், கருணேஸ்வரன், ஜெயராசசிங்கம் மற்றும் சிவனேசராசசிங்கம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புஸ்பராணி, காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் ஜெயபூபதி, காலஞ்சென்ற கணேசானந்தராஜா மற்றும் வற்சலா, யசோதா, பாஸ்கரன், பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,திரு.திருமதி வைரவநாதன் தம்பதிகள், திரு. திருமதி நவரத்தினம் தம்பதிகளின் அன்புச் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (08-04-2022) வெள்ளிக்கிழமை மு.ப 11:00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

வீட்டு முகவரி:
பள்ளம் தோட்டம்,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

(cr 37805) (2.6)

தொடர்புகளுக்கு:
Mobile: +947 6801 6456

# மரண அறிவித்தல்

தோற்றம் 13.02.1936



மறைவு 05.04.2022

## கந்தையா செல்லம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லம்மா அவர்கள் கடந்த (05.04.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் நாகராசா (அமரர்), தம்பிராசா (அமரர்), தங்கச்சியம்மா (அமரர்), சிவராசா, அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌசலாதேவி, தேவதாஸ் (அமரர்), புலேந்திரன் (லண்டன்), ஞானகணேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மதியாபரணம் (பிரான்ஸ்), மங்கையற்கரசி (லண்டன்), சுமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபனா (லண்டன்), ஜெனார்த்தனன் (லண்டன்), கல்ப்பனா (கனடா), கஜனா (லண்டன்), தனஞ்சயன் (லண்டன்), நிரோசன் (பிரான்ஸ்), கஸ்தூரி, ஜோசுவா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஷானா (லண்டன்), ஷாம் (லண்டன்), அபிராமி (லண்டன்), ஆரதன் (லண்டன்), ஜோனத்தன் (கனடா), ஜொகானா (கனடா), பிரியன்ஷிகா, மருஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (10.04.2022) ஞாயிற்றுக்கிழமைமு.ப. 10.00 மணிக்கு இருபாலை கிழக்கு New Living Flame Church இல் நல்லடக்க ஆராதனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19219) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு...

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ள தாவது:

இந்த நாடாளுமன்றில் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? இதுதான் இந்த நாட்டின் நிலைமை.

ஒரு வருடத்துக்கு சம்பளம் வேண்டாம் என்றும், நாடாளுமன்றில் உள்ள உண வகத்தில் உணவு உட்கொள்ள மாட்டேன் என்றும் நான் கூறுகின்றேன். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு கூற முடியுமா?

நாடு இப்போது பெரும் பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. ராஜபக்சக்கள் கௌரவமாக பதவி விலக வேண்டும், மக்களும் அதையே கோருகிறார்கள்.

கோத்தாபய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம். பொருளாதார நெருக்கடியை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்று அவருக்குத் தெரியும். அதை விட்டுவிட்டு பதவிக்காகவோ, தேர்தலுக்காகவோ போட்டியிட வேண்டிய நேரம் இது இல்லை.

அப்படி இல்லையென்றால், மக்கள் விடுதலை முன்னணியாவது ஒரு அணியாக திரட்டிக்கொண்டு தற்காலிகமாக அரசை பொறுப்பேற்று செய்து காட்டுவதற்கு வாய்ப்பளிப்போம்- என்றார். (அ-எ-இ)

## "பஸில்...

டும் என்று, மக்கள் நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் மக்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"கோ கோத்தா கோ" "பஸில் காகம்" என்பன போன்ற கோஷங்களை எழுப்பியும், பதாகைகளைத் தாங்கியவாறும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து சபாநாயகர் சபை நடவடிக்கைகளைச் சிறிது நேரம் ஒத்திவைத்தார்.(அ-எ-இ)

## மஹிந்தவின்...

யின் விசேட நாடாளுமன்றக்குழுக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றிரவு அலரிமாளிகையில் நடைபெற்றது.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான இந்தக்கூட்டம் இரவு 10.40 மணி தாண்டியும் தொடர்ந்தது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் பற்றியும், நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள தொங்கு நிலை பற்றியும் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ-எ-44)

## இலங்கைக்கு...

உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 76 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

36 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலும், 40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டின் நேற்றும் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாட்டு நிலைமையே காணப்படுகின்றது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

டீசல் மற்றும் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் காத்திருக்க நேரிட்டுள்ளது என்றும், பல இடங்களில் மண்ணெண்ணெயைப் பெறமுடியாதுள்ளது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

டீசல் கிடைக்காமை யால் ஆத்திரமுற்ற சாரதிகள் கொழும்பு - கண்டி வீதியில், கடவத்த பகுதியில் வாகனங்களை வீதிக்குக் குறுக்காக நிறுத்திப் போக்குவரத்தை தடை செய்து நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

அதேபோன்று சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றது என்று எரிவாயு சிலிண்டர் விநியோக நிறுவனங்கள் கூறுகின்ற போதும், பொதுமக்கள் எரிவாயு சிலிண்டர்களைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டிய நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது. (அ-எ-இ)

## மக்களைச்...

யில், அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் மக்கள் சமூக வலைத்தளக் கணக்கு ஒளிப்படங்களில் இலங்கைத் தேசியக் கொடியை இணைத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் பதவி விலகக் கோரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் பேஸ்புக் கணக்கு ஒளிப்படங்களிலும், கடந்த சில நாள்களாக மக்கள் இணைத்து வரும் இலங்கைத் தேசியக் கொடி நேற்றிரவு இணைக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்சவின் மகன்களின் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச உட்பட, ஆளும் கட்சியின் எம். பிக்கள் தங்கள் பேஸ்புக் கணக்கு ஒளிப்படங்களில், இலங்கைத் தேசியக் கொடியை இணைத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைச் சாந்தப்படுத்தும் ஒரு முயற்சியாக ராஜபக்சக்கள் இதை மேற்கொண்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால் இது மக்களை முட்டாள்களாக நினைக்கும் செயற்பாடு என்று சமூக வலைத்தளங்களில் மக்களால் கருத்துப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேநேரம், இலங்கைத் தேசியக் கொடியை இணைத்துள்ள மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோரின் ஒளிப்படங்களுக்கு மக்கள் சிரிப்பு மற்றும் ஆத்திரக் குறியீடுகளை தாராளமாகக் கொடுப்பதைக் காணமுடிந்தது. அவர்களின் பேஸ்புக் பக்கங்களில் கருத்துக்களைப் பதிவிடும் வசதிகள் நீக்கப்பட்டுள்ளதால் மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது. (எ-இ)

## காலம்...

நியமிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளு நர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, உலக வங்கியின் முன்னாள் பதில் தலைமைப் பொருளியலாளர் பேராசிரியர் சாந்த தேவராஜன் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆபிரிக்க திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஷர்னி குரே ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு கடன் நெருக்கடியை நிவர்த்தி செய்து, இலங்கையின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மீட்சிக்கான வழிகாட்டல்களை வழங்குவார்கள் என்றும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆலோசனைகளை வழங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## மருந்துகளுக்கு...

னைகளை எதிர்நோக்க நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்மறையான நிதி முறைமையால் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமேல் மாகாண இணைப்பாளர், மருத்துவர் இந்திக ரத்நாயக்க தெரிவித்தார்.

டொலர் பற்றாக்குறையால் மருந்துகளை இறக்குமதி செய்ய முடியா துள்ளது என்று தெரிவித்துள்ள அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் மருந்துகளை இறக்குமதி செய்வது மேலும் சிக்கல் நிலைமையையே அடையும் என்றும், மருந்துகளுக்கு அதிக தேவை ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

## பதவியை...

டாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எது நேர்ந்தாலும் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகமாட்டார் என்று தெரிவித்தார். அதேநேரம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலக வேண்டும் என்று நாடுமுழுவதும் மக்கள் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். (அ-எ)

(விரிவு 2ஆம் பக்கம்)

## ஓயவில்லை...

பய ராஜபக்சவும், அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று நாடு முழுவதும் நடத்தப்படும் மக்கள் போராட்டங்கள் நேற்றும் பல இடங்களில் நடைபெற்றன.

மக்கள் போராட்டங்களிலும், பேரணிகளிலும் ஈடுபட்டதால் சில இடங்களில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்ற நிலையில், நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியில் பொதுமக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், அரசாங்கத்துக்கும் எதிராகப் பொதுமக்கள் கோஷங்களை எழுப்பியதுடன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். கொள்ளுப்பிட்டியில் நேற்று இரவிரவாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று அவர்கள் கோஷங்களை எழுப்பினர். பிலியந்தல, ஹாலிஎல, கண்டி, கொட்டகலை, புத்தளம், ஏறாவூர், கல்முனை, மட்டக்களப்பு, மருதமுனை ஆகிய இடங்களிலும் நேற்று பொதுமக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, சுகாதார அமைச்சுக்கு முன்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது. நெருக்கடிகளுக்குத் தீர்வு வழங்கத் தவறிய அரசாங்கத்தைக் கண்டித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-எ-இ)

## ஜோன்ஸ்டனின்...

ரவாளர்களும் அங்கு கூடியதால் பதற்ற நிலைமை காணப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒருபோதும் பதவி விலக மாட்டார் என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்று மாலை அவரது அலுவலகத்துக்கு வெளியே கூடிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதே நேரம், குருநாகல் நகர சபைத் தலைவர் மற்றும் ஆதரவாளர்கள், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அலுவலகத்தில் கூடியிருந்தனர். தங்களை மீறி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் முடியைக்கூடப் பிடுங்க முடியாது என்று, நகர சபைத் தலைவர் பேஸ்புக்கில் காணொலிப் பதிவொன்றையும் வெளியிட்டிருந்தார்.

அலுவலகத்துக்கு வெளியே மக்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வண்ணம் இருந்தனர். அதனால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. (அ-எ-இ)

## நேற்றுமுதல்..

வித்துள்ளது.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் அடுத்த தவணை எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி வழங்கப்படவிருந்த 2021 ஆம் கல்வி ஆண்டின் மூன்றாம் தவணை விடுமுறை முற்கூட்டி வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இலங்கை...

எது என்று 'பினான்ஷியல் டைம் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

அதேவேளை அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றும் வீழ்ச்சியடைந்தது. சில வர்த்தக வங்கிகள் டொலரின் விற்பனை விலையை 320 ரூபாவாகக் குறிப்பிட்டிருந்தன என்று நிதிச் சந்தை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (அ-எ-இ)

## தங்கம்...

எது. கொழும்பு, செட்டியார் தெருவின் நேற்றைய நிலைவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று, ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரத்தில் 24 கரட் தங்கம், பவுண் ஒன்று 2 லட்சம் ரூபாவுக்கும் மேல் விற்பனை செய்யப்பட்டிருந்தது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெ.அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஏப். 7

முகமாலை மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் அமெரிக்காவில் வசிப்பவர்களின் நிதியுதவியில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் குறித்த பணியின் முன்னேற்றங்கள், குறித்த பணியை தொடர்ந்தும் மேற்கொள்வது ஆகியன தொடர்பில் கள ஆய்வை மேற்கொள்ளும் நோக்கில் அமெரிக்கப் பிரதிநிதிகள், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், டாஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோர் சென்றனர்.

இதன்போது குறித்த பகுதியில் மீட்கப்படும் ஆபத்தான வெடிபொருள்கள், அதனை அகற்றுவதில் ஏற்படுகின்ற சவால்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஒ-14,113)

# கல்வியியல் முதுமாணி பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தால் நாளைமறுதினம் நடத்தப்படவிருந்த கல்வியியல் முதுமாணி 2021/22 (அணி XIV) க்குரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். நாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் கணிசமான தேர்வுநாடிகள் வெளிமாவட்டத்தில் உள்ளனர் என்பதாலும் குறித்த பரீட்சை பிற்போடப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

பாதுகாப்பு வேலி சேதம்;

# கால்நடைகளால் பயிர்கள் நாசம்

சாவகச்சேரி, ஏப்.7

தென்மராட்சி தெற்குப்பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் பாதுகாப்பு வேலி சேதமடைந்துள்ளதால் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்களை கட்டாக்காலி மாடுகள் அழிக்கின்றன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

5 வருடங்களுக்கு முன் வேள்ட்விஷன் நிறுவனத்தால் 2 கி.மீற்றர் தூரத்துக்கு முட்கம்பி வேலி கமக்கார அமைப்புக்கள் ஊடாக அமைக்கப்பட்டன.

எனினும் இந்த வேலியில் பல இடங்களில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளமையால் இவற்றின் ஊடாக கால்நடைகள் நுழைந்து பயிர்களை நாசம் செய்கின்றன.

இதுதொடர்பில் கமக்கார அமைப்புகளுக்கு முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மேலும் தெரிவித்துள்ளனர். (ச-9)

# நீர் இணைப்பு வழங்கல் நடமாடும் சேவை

முல்லைத்தீவு, ஏப். 7

முல்லைத்தீவு-கள்ளப்பாடு தெற்கு (மு/90)கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு புதிய நீர் இணைப்புகளை வழங்கும் நடமாடும் சேவை நாளை மற்றும் நாளைமறுதினம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்கள் குறித்த கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவர்கள் வீடுகளுக்கு நேரடியாக புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்பப்படிவங்களை வழங்குவர்.

விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொண்ட பொதுமக்கள் அதனைப் பூர்த்தி செய்து கோரப்பட்ட ஆவணங்களுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும் இது தொடர்பில் பொது மக்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் 0212283981 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ-14, 214)

**கட்டட பொருள்கள் விற்பனைக்கு**

வீடு கட்டிய பின் மிஞ்சிய அரி கல், பனந்தீராந்தியன்னல் தீராந்தி விற்பனைக்குண்டு.

077 360 9137

**வீடு வாடகைக்கு**

கொக்குவிலில் யாழ். பல்கலைக்கழகம், மருத்துவபீடம் அருகே 3 அறையுடன் கூடிய வீடுவாடகைக்கு உண்டு. 4 - 5 குடும்ப அங்கத்தவர்களுக்கு பொருத்தமானது. அரச, தனியார் துறையில் வேலைசெய்யும் நிரந்தர வருமானம் உள்ளவர்கள் மாத்திரம் தொடர்பகொள்ளவும்.

076 794 4001 (cs.43948 A) (2.6)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் பின்புறம் 3 பரப்புக்காணி விற்பனைக் குண்டு, ஆசிரிய மாணவர்கள் தங்குமிடவிடுதி அமைக்க உகந்த இடம். (CS 19215) (4/6)

தொடர்புக்கு:- 076 122 3927, 077 409 7431

**அறை வாடகைக்கு**

யாழ். மருத்துவபீடத்திற்கு அருகே கீழ் மாடியில் மருத்துவபீட மாணவிகள் உள்ளதால், மேல்மாடியில் மருத்துவபீட மாணவிகளுக்கு மட்டும் அறைகள் வாடகைக்கு விடப்படும்.

076 794 4001 (cs.43948 B) (2.6)

**தச்சுவேலையாள் தேவை (நிரந்தரமானது)**

ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகர் பகுதியில் சகலவிதமான வேலைகளும் தெரிந்த இருவர் உடனடியாக தேவை.

சம்பளம் : 75,000 - 90,000

உணவு / தங்குமிட வசதி உள்ளது

077 213 7266

# போராட்டங்களை அடக்குவதற்காக உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்துக

**ஜனாதிபதிக்கு ரொஷான் ரணசிங்க ஆலோசனை**



கொழும்பு, ஏப். 7

பொலிஸ்மா அதிபர் இரட்டை வேடம் போடுகிறார். போராட்டங்களை முடக்க ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் தனது உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும் இல்லாவிடின் பெரும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் அமைதிவழிப் போராட்டம் ஆளும் தரப்பின் உறுப்பினர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டுள்ளமை அவதானத்துக்குரியது. மக்களின் போராட்டம் எனக் குறிப்பிட்டுக் கொண்டு திட்டமிட்ட வகையில் தவறான நோக்கங்களுடன் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொலநறுவை மாவட்ட மக்களுக்கு அநீதி இழைத்துள்ளது என்பதை குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். உரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த தீர்மானம் முற்றிலும் தவறானது. விவசாயிகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சுட்டிக்காட்டி இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியுள்ளேன். அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. நாட்டு மக்கள் தன்னிச்சையான முறையில் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் எனக் குறிப்பிடப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. மக்களின் அமைதிவழிப் போராட்டம் தற்போது அரசியல் போராட்டமாக மாற்றமடைந்துள்ளது. 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலநறுவை மாவட்டத்தில் உள்ளார்கள். மக்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் செயற்படுவார்களாயின் ஏன் என் வீட்டின் மீது மாத்திரம் தாக்குதலை முன்னெடுக்கவேண்டும்?

என் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசியில் பலமுறை அழைப்பை ஏற்படுத்தினேன். இருப்பினும் அவர் எவ்வித பதிலும் வழங்கவில்லை.

தற்போதைய நிலையில் பொலிஸ்மா அதிபர் இரட்டை வேடம் போடுகிறார். ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரைப் பதவிநீக்க வேண்டும். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் தனது உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்டங்களை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் - என்றார். (ம)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 45 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை**

- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை ( 300000/= ) மூன்று லட்சம் மட்டும்.

தொடர்பு :

074 291 3725 /074 291 3726/074 291 3727

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 100 தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,**

**ஒரு பரப்பின் விலை 450000.00**

**(தரகர் தேவையில்லை)**

**ஜெயம்:-**

077 814 7389, 077 241 7589

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.